|| श्रीः ||

# || श्रीकामकोटिप्रदीपः ||

# ஸ்ரீ காமகோடி ப்ரதீபம்

மலர் 15 விஸ்வாவஸு - பாரபவ ஹூ பங்குனி - சித்திரை மீ ஏப்ரல் 2026 இதழ் 4

ஸ்ரீ காஞ்சி காமகோடி
பீடத்தின் சார்பில்
வெளியிடுவோர் :
ஸ்ரீ காமகோடி கோஸஸ்தானம்



# ஸ்ரீ காமகோடி ப்ரதீபம்

## பங்குனி - சித்திரை 2026



**மலர் 15 ஏப்ரல் 2026 இதழ் 4**

### பொருளடக்கம்


| | |
|---|---|
| ப்ரார்த்தனை | 3 |
| ஆசிரியர் பக்கம் | 5 |
| தெய்வத்தின் குரல் | 7 |
| பூஜ்யஸ்ரீ சந்த்ரசேகரேந்த்ர ஸரஸ்வதி ஸங்கராசார்ய ஸ்வாமிகள் | |
| நீதிக் கதைகள் | 11 |
| பூஜ்யஸ்ரீ ஜயேந்த்ர ஸரஸ்வதி ஸங்கராசார்ய ஸ்வாமிகள் | |
| அனுக்கிரஹ பாஷணம் | 13 |
| பூஜ்யஸ்ரீ சங்கர விஜயேந்த்ர ஸரஸ்வதி ஸங்கராசார்ய ஸ்வாமிகள் | |
| ஸூத ஸம்ஹிதை - தமிழ் விளக்க உரை | 17 |
| அநுகீதாபர்வம் | 20 |
| இயற்பகை நாயனார் | 22 |
| ஸ்ரீ பாதஸப்தபதி | 25 |
| சித்திரை மாத விசேஷ தினங்கள் | 28 |
| முகாம் நிகழ்ச்சிகள் | 29 |
| கீர்த்தி, சந்திரன், பரதன் | 33 |
| ஆயுர்வேதமும் - ஸுபாஷிதமும் | 37 |
| வேதாந்த ஸம்வத்ஸரம் | 39 |
| வேத ஸூக்தங்கள் | 40 |
| சுக்ர நீதி | 42 |
| மஹா பெரியவாளின் நினைவு மஞ்சரி | 44 |
| மண்ணின் மகளின் அறவுரைகள் | 46 |
| ப்ரபோத சிந்தாமணி | 47 |
| ஸோபான பஞ்சகம் | 48 |


भाग्योदयेन बहुजन्मसमार्जितेन सत्संगमं च लभते पुरुषो यदा वै।
अज्ञानहेतुकृतमोहमदान्धकारनाशं विधाय च सदोदयते विवेकः।।

Man obtains the contact of saints only when the merits earned by him through many births ripen. Wisdom dawns in the wake of such contact dispersing the darkness of infatuation and arrogance which have their root in ignorance.


**நிர்வாகக் குழு**

**ஸ்ரீ K. ஜயராமகிருஷ்ணன்**

**டாக்டர் வெங்குடி B. ரிஷிகேசன்**



## ஸ்ரீ காமகோடி ப்ரதீபம்

**கௌரவ தலைமை ஆசிரியர் :**

டாக்டர் S. மணி திராவிட் சாஸ்த்ரி

**ஆசிரியர் குழு :**

டாக்டர் R.கிருஷ்ணமூர்த்தி சாஸ்த்ரிகள்

ஸ்ரீ T. N. ராமசந்திரன்

ஸ்ரீ T. S. ராகவன்

பேராசிரியர் விஷ்ணுபோத்தி V.S.

ப்ரஹ்மஸ்ரீ ஸ்ரீரமண சர்மா

**வெளியிடுவோர் :**

ஸ்ரீ காஞ்சீ காமகோடி பீடத்தின் சார்பில்
ஸ்ரீகாமகோடி கோசஸ்தானம்

**அலுவலக முகவரி :**

ஸ்ரீ காஞ்சீ காமகோடி பீடம்
நெ.1.சாலைத்தெரு,
காஞ்சீபுரம் - 631502.
தொலைபேசி : 044 - 27222115

**மின் அஞ்சல் :**
kamakotipradeepam@gmail.com


**சந்தா விவரம்**

| | |
|---|---|
| ஒரு இதழ் | ரூ. 20/- |
| ஒரு வருடத்திற்கு | ரூ. 220/- |
| மூன்று வருடங்களுக்கு | ரூ. 600/- |
| ஐந்து வருடங்களுக்கு | ரூ. 1000/- |
| ஆயுள் சந்தா | ரூ. 5000/- |
| புரவலர் | ரூ. 10000/- |

Published by : Sri Kamakoti Kosasthanam on behalf of Sri Kanchi Kamakoti Peetam, No1, Salai Street, Kancheepuram - 631502. Ph : 044 - 27222115.

Periodicity : Monthly.

Printed at : Jai Ganesh Offset, Chennai.



श्रुतिशिखरसमुत्थस्तत्त्वसंवित्प्रकाशः कलितिमिरनिवृत्त्यै कल्पमानश्चकास्तु ।
शिवगुरुसुतमार्गं दीपयन् चन्द्रमौलेः शिशिरकरुणया श्रीकामकोटिप्रदीपः ।।

कामकोटिप्रदीपोऽयं सतां विभ्राजतां गृहे ।
यत्प्रकाशलवात्सद्यः पापध्वान्तो हृतो भवेत् ।।

# ப்ரார்த்தனை

# प्रार्थना

*ஹே ருத்ர பகவானே ! உனக்கு நமஸ்காரம்.*
*எம்முடைய மக்களிடத்தும், பசுக்களிடத்தும், மங்களத்தை உண்டாக்கு.*
*இவ்வூரில் எல்லா உயிர்களும் பிணியற்றும்*
*செழிப்புள்ளவைகளாக இருக்க அருள் புரி.*

*[த்யாகராஜரின் 'நீ தய ராதா' க்ருதி]*

*ருத்ரனே! எம்முடைய பெரியவர்களையும், குழந்தைகளையும், துன்புறுத்த வேண்டாம். யௌவன புருஷர்களையும் ஹிம்சிக்க வேண்டாம். எமது கருவிலுள்ள சிசுக்களையும், ஹிம்சிக்க வேண்டாம். எமது தந்தைமார்களையும், தாய்மார்களையும் துன்புறுத்த வேண்டாம். எமது பிரியமான சரீரங்களையும் ஹிம்சிக்க வேண்டாம்.*

*உமது மங்கள ரூபம் எம்மிடம் இருக்கட்டும், [ஸ்ரீ ருத்ரம், சமகம்]*

★★★★★★★★★★★

*எனக்கு வேண்டிய வரங்களை இசைப்பேன் கேளாய் கணபதி*
*மனதில் சலனமில்லாமல் மதியில் இருளே தோன்றாமல்*
*நினைக்கும் பொழுது நின் மவுன நிலை வந்திட நீ செயல் வேண்டும்*
*கனக்கும்செல்வம் நூறு வயதிவையும் தர நீ கடவாயே .*
*பேசாப் பொருளைப் பேச நான் துணிந்தேன்*
*கேட்கா வரத்தை நான் கேட்கத் துணிந்தேன்.*
*மண்மீது மக்கள் பறவைகள், விலங்குகள், பூச்சிகள்,*

*புற்பூண்டு மரங்கள் யாவுமென் வினையால் இடும்பை தீர்த்தே*
*இன்பமுற்று நட்புடன் இணங்கி*
*வாழ்ந்திடவே செய்தல் வேண்டும் தேவ தேவ!*
*ஞானாகாசத்து நடுவே நின்று நான்*
*'பூ மண்டலத்தில் அன்பும் பொறையும் விளங்குக*
*துன்பமும் அடிமையும் நோவும்சாவும் நீங்கிச்சார்ந்த பல்லுயிரெல்லாம்*
*இன்புற்று வாழ்க என்பேன். இதனை நீ திருச்செவி கொண்டு*
*திருவுளமிரங்கி 'அங்கனமே ஆகுக' என்பாய் ஐயனே!*
*இன்னாள் இப்பொழுது எனக்கிரங்கி வரத்தினை அருள்வாய்.*
*ஆதி மூலமே ! அனந்த சக்தி குமாரனே! சந்த்ரமௌலீ !*
*நித்தியப் பொருளே சரணம் சரணம் சரணமிங்குனக்கே*

*[பாரதியார் :- விநாயகர் நான்மணி மாலை ]*




ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடாதிபதி
**ஜகத்குரு ஸ்ரீ சங்கராச்சார்ய ஸ்வாமிகள்**
**ஸ்ரீமடம் ஸம்ஸ்தானம்,**
நெ. 1, சாலைத்தெரு, காஞ்சிபுரம்- 631 502.
web : www.kamakoti.org Email : kanchiacct@gmail.com

☎ : 044-27222115
Cell : 9445421115



## கைங்கர்யங்கள்

| ஸம்வத்வர சேவா கைங்கர்யங்கள் | ஒருமுறை | ஒரு வருடம் | நிரந்தர வைப்பு |
|---|---|---|---|
| அனுஷ பூஜை (ப்ரதி மாதம் அனுஷத்தன்று) | 1,000 | 15,000 | 2,00,000 |
| அவிட்டம் பூஜை ( ப்ரதி மாதம் அவிட்டத்தன்று) | 1,000 | 15,000 | 2,00,000 |
| ப்ரதோஷ பூஜை | | 1,000 | 10,000 |
| பௌர்ணமி பூஜை | | 500 | 5,000 |
| **மற்ற சேவா கைங்கர்யங்கள்** | | **ஒருமுறை** | **நிரந்தர வைப்பு** |
| நித்ய வேத பாராயணம் | | 5,000 | 50,000 |
| நித்ய அன்னதானம் | | 5,000 | 50,000 |
| கோ சம்ரக்ஷணம் | | 5,000 | 1,00,000 |
| வேத பாடசாலை | | 5,000 | 50,000 |
| அகண்ட நெய் தீப சேவை | | 5,000 | 1,00,000 |

Online Transfer Details for doing Contribution towards above mentioned Pooja Kainkaryams
Account Name : **SRI K.K.P.SANKARACHARYA SWAMIGAL SRIMATAM SAMSTHANAM**
BANK NAME & BRANCH : **Indian Bank, Sankara Mutt Branch, Kanchipuram**
SB A/C No : **411550436** IFS Code : **IDIB000S085**

Kindly Intimate your contribution details Viz: Name, Address, Mobile Number, E-Mail ID, Amount Transferred, Seva Name (for which you are contributing), Transaction Reference No/UTR No. to : **kanchiacct@gmail.com** to enable us to send you receipt and prasadam.

**Online Contribution can be made through E-Seva Portal - www.kanchimuttseva.org**

# ஆசிரியர் பக்கம்

*புது வருடம் பிறக்கிறது. உண்மை. ஒவ்வொரு வருடம் பிறக்கும் போதும் இந்த வருடமாவது நன்றாக இருக்க மக்கள் ப்ரார்த்தனை செய்வார்கள். இந்த வருடம் விசேஷமாக யுத்த களமாக காண்கிறது. மத அஹங்காரத்தாலும் தனி மனித அஹங்காரத்தாலும் ஏற்பட்டிருக்கும் யுத்தத்தால் பொது மக்கள் பெரும் இன்னலுக்கு ஆளாகி உள்ளார்கள். இதன் நடுவில் **'பராபவம்'** என்னும் புது வருடம் பிறக்கிறது.*

*கலி புருஷனின் ஆட்டத்தில் இது ஒரு வகை போலும். இப்படி நடக்கும் என்று ஊகித்து கலி ப்ரபாவம் அடங்க நம் முன்னோர் ப்ரார்த்தனை செய்தனர் போலும்!*

***'பொலிக பொலிக வல்லுயிர்ச் சாபம் கலியும் கெடும்'***

*என்று நம்மாழ்வாரும்,*

***'கற்றாங்கு எரியை ஓம்பி கலியை வாராமே'***

*என்று சம்பந்தப் பெருமானும், இறைவனைப் பாடினர். நம்மாழ்வார் ஹரியை நாடு என்றார். சம்பந்தப் பெருமான் ஹரனை நாடு என்றார். இருவருக்கும் இலக்கு கலியின் கொடுமை கூடாது என்பது தான். நம் எதிர்பார்ப்புகள் பல இருந்தாலும் அவைகளை இறைவன் தர நாம் நம்மை யோக்யர்களாக வைத்திருக்க வேண்டும் இது புரியாமல் வேண்டுதல் மட்டும் இருந்து பயனில்லை. எனினும் இந்த புது வருடம் இப்படி இருக்க விழைவோம். ராம ராஜ்யம் எப்படி இருந்தது என்று வால்மீகி ரிஷி கூறுகிறார்.*

*'ராமராஜ்யத்தில் மக்கள் எந்த கஷ்டத்தையும் அனுபவிக்கவில்லை. வ்யாதி உபத்ரவமில்லை, திருட்டுப் பயமில்லை. அகால மரணம் ஏற்படவில்லை. எந்த ருதுவிலும்; மரங்கள் புஷ்பங்களுடன் செழித்தன. மேகங்கள் அந்த அந்த காலங்களில் மழை பொழிந்தது. காற்று சுகமாய் வீசிற்று. அனைத்து மக்களும்*

*பேராசை அற்றவர்களாய் மகிழ்ச்சியுடன் இருந்தனர். அனைவரும் தர்மத்தில் நாட்டம் உடையவர்களாய் இருந்தனர்.*

*இந்த லக்ஷிய நிலையை நாமும் நமக்கு வர வஸந்த நவராத்ரியின் நாயகியான அம்பாளின் சரணாரவிந்தத்தைப் பற்றுவோம்.* ***'ஸ்ரேயோ பூயாத் ஸகல ஜனானாம்'*** *[பேரின்பம் அனைத்து மக்களுக்கும் கிடைக்கட்டும்] என்று அம்பாளைப் ப்ரார்த்தித்துக் கொண்டு புது வருடத்தை வருக என்று வரவேற்போம். இந்த* ***பராபவம்*** *அனைத்துத் தீமைகளுக்கும்* ***பராபவம்*** *[தோற்கடித்தல்] ஆக இருக்கட்டும்.*

*அனைத்துத் துர் சிந்தனைகளுக்கு 'பராபவம்' ஆக இருக்கட்டும். அனைத்து துர் நடத்தைகளுக்கு 'பராபவம்' ஆக இருக்கட்டும். உலகெங்கும் அன்பும், அமைதியும், சாந்தியும் என்றென்றும் நிலவ வருக வருக என்று புது வருடத்தை வரவேற்போம் என்று கூறி இவ்விதழை ஸ்ரீ சரணர்களின் பொற்பாதத்தில் ஸமர்ப்பிக்கிறோம்.*

*ஜய ஜய சங்கர! ஹர ஹர சங்கர!*



இனிய
"*பராபவ*"
தமிழ் புத்தாண்டு
நல்வாழ்த்துக்கள்



# தெய்வத்தின் குரல்

**ஜகத்குரு பூஜ்யஸ்ரீ சந்த்ரசேகரேந்த்ர ஸரஸ்வதி சங்கராசார்ய ஸ்வாமிகள்**

## ஜய ஜய சங்கர ! ஹர ஹர சங்கர !



ஒன்றுபடுத்தவே வந்த ஆச்சார்யாளின் சரித்ர விஷயமாகவே வித்யாஸமான அபிப்ராயங்களைச் சொல்வது மனஸுக்கு ஏற்கவே இல்லை. அவர் ஒன்றும் ஸ்வசரிதையோ, உயிலோ எழுதி வைத்து விட்டுப் போகவில்லை! பின்னால் வந்தவர்கள் ஒவ்வொருத்தர் ஒவ்வொன்றை ஆதாரம், ப்ரமாணம் என்று வைத்துக் கொண்டு முடிவு பண்ணுகிறோம்! அடிப்படை உண்மை நாமெல்லாரும் அவருடைய பக்தர்கள், சிஷ்யர்கள், குழந்தைகள் என்பது தான். எல்லா ஆராய்ச்சியையும் விட அவரிடம் நம் எல்லோருக்கும் பக்தியும், நமக்குள்ளே கொஞ்சங்கூட த்வேஷலேச மில்லாத அன்பும் இருப்பது தான் முக்யம்; உயிர்நிலை. இதற்கு ஹானி என்றால் எல்லா ஆராய்ச்சியையும் வாபஸ் வாங்கிக் கொண்டு விடலாம்... (சிரித்து) 'எது ஆச்சார்யாளின் ஸித்தி ஸ்தலம்?' என்று கேட்டால், சில ஸித்த புருஷர்களைப் பற்றி ஒருத்தரே மூன்று, நாலு இடங்களிலே ஸமாதியானார்

என்கிறார்களே, அப்படி ஆச்சார்யாளும் ஆனாரென்று சொல்லி விடலாம் போல் இருக்கிறது !

ஆச்சார்யாள் இன்று இல்லாவிட்டாலும், தமக்குப் பதிலாக என்றைக்கும் இருக்கும்படியாக பக்தியாகவும், ஞானமாகவும் ஏராளமாக எழுதி வைத்து விட்டுப் போயிருக்கிறார். அவற்றில் கொஞ்சமாவது தினமும் அவச்யம் பாராயணம் பண்ணணும். பண்ணினால் அவரையே நேரில் பார்க்கிற மாதிரி ! பக்தியும் வரும், ஞானமும் வரும்.

எத்தனையோ ஆச்சார்யர்கள் உண்டு. ஒருத்தர், ஸ்வாமிக்கு ஸேவகனாக ஸதா கைங்கர்யம் பண்ணிக் கொண்டிரு. அதுதான் மோக்ஷம்' என்பார். இன்னொருத்தர் 'சூன்யமாகப் போய்விடு. அதுதான் மோக்ஷம்' என்பார். இன்னொருத்தர், 'ஸ்வர்கம் என்ற இன்ப லோகத்திற்குப் போய் எல்லா இந்த்ரிய ஸுகங்களும் யதேஷ்டமாக அநுபவித்துக் கொண்டிரு. அதுதான் மோக்ஷம்' என்பார். இன்னொருத்தர், 'உனக்கு ரொம்பப் பாப கர்மா இருக்கிறது. அதனால் உனக்கு மோக்ஷமே கிடையாது; நித்ய நரகம் தான்' என்று கூடச் சொல்வார் !

ஆச்சார்யாள் தான், 'அப்பா, நீ இப்பவும் எப்பவும் மோக்ஷத்திலேயே இருந்து கொண்டிருப்பவன் தான் ! மாயையின் ப்ராந்தியில் தான் அது உனக்குத் தெரியவில்லை. இந்த ப்ராந்திக்கு ஆளாவது மனஸ்தான். ஞானத்தினால் அதை அழித்துப் போட்டுவிட்டாயானால் அப்போதே மோக்ஷாநுபவம் தான். மோக்ஷத்திலே வேறே ஒரு ஸ்வாமியிடம் நீ போகவில்லை ! நீயே தான் ஸ்வாமி, நீயே தான் பரமாத்மா !' என்றவர்.

பாபிகளுக்கு நித்ய நரகம் என்று அவர் சொல்லாதது மட்டுமில்லை. அவர்களுக்கும் உய்வு உண்டு என்று சொல்வதோடும் நிறுத்திக் கொள்ளவில்லை. இதற்கெல்லாம் மேலே, பாபி, பாபி என்கிறவனும் பரமாத்மாவே தான் என்பதாக, பதிதோத்தாரணத்தின் உச்சிக்குப் போனவர் நம் ஆச்சார்யாள். தம்முடைய அத்வைதத்தால் பதிதனையும் பரப்ரம்மமாக்கிய ஆச்சார்யாளைப் போலப் பதித பாவனர் யாருமில்லை.

கன்னட பாஷையில் **'மங்களம், குரு சங்கரா !'** என்று பாட்டு இருக்கிறது. அதில் **'பாதகனெனு பரமாத்மனு மாடிதே ! '** (பாதகனையும் பரமாத்மாவாக ஆக்கியவர்) என்று வருகிறது !

அப்படிப்பட்ட ஆச்சார்யாளுக்கு, லோக மங்களகாரகரான சம்-கரருக்கு நாமெல்லாரும் மங்களம், ஜய மங்களம் சொல்லுவோம். **'ஜய ஜய சங்கர'** என்று மங்கள கோஷம் போடுவோம். அவருடைய சுப நாமத்திற்கே ஜய சப்தம் விசேஷமாக உரித்தானது. ஏன் அப்படிச் சொல்கிறேன் என்றால் நம்முடைய தமிழ் தேசத்தின் மஹா பெரியவர் ஒருவர் **'நாவுக்கு அரசர்'** என்று ஈச்வரனே பட்டம் கொடுத்த அப்பர் ஸ்வாமிகள்- சொல்லியிருப்பதன் ப்ரமாணத்தில் தான் ! அவர் திருவாரூர்- திருத்தாண்டகம் ஒன்றில் என்ன சொல்கிறார் என்றால்: **'ஏ நெஞ்சமே ! இப்படி வா, எங்கிட்டே! நீ கொஞ்சங்கூட நிலை கொள்ளாமல் அலைந்தபடி இருக்கியே ! நீ நிலையான ஸ்தானத்தைப் பெற ஆசைப்பட்டால் என்ன பண்ணணுமென்று சொல்கிறேன். கேட்டுக் கொள்ளு ! தினமும் விடிவதற்கு முந்தி ஸ்வாமி கோயிலுக்குப் போ. ஸந்நிதியைப் பெருக்கி மெழுகு. ஸ்வாமிக்குப் புஷ்பஹாரம் ஸமர்ப்பணம் பண்ணு. வாக்புஷ்பத்தாலும் ஸ்தோத்ர அலங்காரம் பண்ணு. வாயாரப் பாடு ! தலையாரக் கும்பிடு ! கூத்தாடு ! சங்கரா ! ஜய ! போற்றி ! போற்றி !** ' என்றும், **'கங்காஜடாதரா ! '** என்றும், **'ஆதிப் பொருளே, ஆரூரனே !'** என்றும் அலறி கோஷம் போடு என்கிறார். சங்கர நாமாவோடு தான் ஜய சப்தத்தைச் சேர்த்துச் சொல்லி, அது போதாதென்று தமிழிலும் ஒன்றுக்கு இரண்டாகப் 'போற்றி' போட்டிருக்கிறார்.

மாணிக்கவாசகர்... அவர் ரொம்ப அத்வைதமாகவே சொன்னவர், மஹா பெரியவர்- அவரும் அந்தாதி க்ரமத்தில் பாடியிருக்கிற திருச்சதகத்தில் ஒரு அடியை **'சங்கரா, போற்றி போற்றி!** ' என்று முடித்து விட்டு, அடுத்த அடியும் **'சங்கரா போற்றி ! '** என்றே ஆரம்பித்திருக்கிறார்.

அப்பர் ஸ்வாமிகள் **'ஜய, போற்றி'** போட்ட பாட்டு சொல்கிறேன்:

**நிலை பெறுமா றெண்ணுதியேல் நெஞ்சே, நீ வா !**
**நித்தலுமெம் பிரானுடைய கோயில் புக்குப்**
**புலர்வதன்முன் அலகிட்டு மெழுக்கு மிட்டுப்**
**பூமாலை புனைந்தேத்திப் புகழ்ந்து பாடித்**
**தலையாரக் கும்பிட்டுக் கூத்து மாடிச்**
**'சங்கரா! சயபோற்றி போற்றி!' யென்றும்,**
**'அலைபுனல்சேர் செஞ்சடையெம் ஆதீ ! ' யென்றும்,**
**'ஆரூரா! என்றென்றே அலறா நில்லே ! '**

ஆச்சார்யாளுக்கு எப்போதும் **'ஜய ஜய, ஹர ஹர !'** போட்டுக் கொண்டே இருப்போம்! ஜய சப்தம் நமக்கு ஆத்ம ஜயத்தைக் கொண்டு வந்து கொடுக்கும். ஹர சப்தம் தப்பை, தீமையை எல்லாம் போக்கி விடும். 'சம்கர' சப்தமே 'சம்'மாகிய நித்ய மங்களத்தைச் செய்து விடும் ! ஸ்ரீ சங்கர மூர்த்தி ஸ்மரணமும்தான் !

நாம் எல்லோரும் நன்றாக, ஒற்றுமையாக இருக்க அவருடைய ஸ்மரணையே போதும் !

**நம: பார்வதீ பதயே !**

**ஹர ஹர மஹாதேவ !**

**வேத ரக்ஷண நிதிக்கு பணம் அனுப்ப வேண்டிய தகவல்கள்**

# VEDA RAKSHANA NIDHI TRUST

**ICICI Bank** T. Nagar, Chennai 17, A/c. No. 602 601205 431

**IFSC Code :** ICIC 0006026

**Bank of Baroda** A/c No. 05320100002089 IFSC CODE barb0chenbs

**Indian Bank** West Mambalam A/c. No. 418622532 IFSC IDIB 000w005

**Canara Bank** West Mambalam A/c No. 0917101041732 IFSC CNRB 0002616

**Indian Bank** Mutt Branch, Kancheepuram **A/c No. 411552514 IFSC IDIB b0005085**

பண உதவி செய்பவர்கள் எவ்வளவு தொகை வேண்டுமானாலும் அனுப்பலாம். செலுத்துபவர் அவருடைய PAN No. ஐயும், கோத்ரம், நக்ஷத்ரம், செல் போன் எண் முதலியவைகளை ட்ரஸ்டுக்குத் தெரிவிக்கவும்.

வேத ரக்ஷண நிதிக்குப் பணம் அனுப்புபவர்கள் விவரத்தை கீழ்கண்ட இ. மெயிலுக்கு அனுப்புமாறு கேட்டுக் கொள்கிறோம்.

VRNT e.mail :
office@vrnt.org <mailto : office@vrnt.org>
Phone : 044 - 24740549

# நீதிக் கதைகள்

ஜகத்குரு பூஜ்யஸ்ரீ ஜயேந்த்ர ஸரஸ்வதி சங்கராசார்ய ஸ்வாமிகள்

## அன்னம் சுத்தமானால் எண்ணம் சுத்தமாகும்

### ஆஹார சுத்தே ஸத் - த்வ சுத்தி



வீட்டிலேயே மனைவி பரிமாறுவதை விடத் தாயார் பரிமாறும் உணவுக்கு விசேஷம் அதிகம்.

எல்லாவற்றையும் விட ஸ்வயம்பாகம் - தானே சமைத்துச் சாப்பிடுவது - அதி விசேஷமானது. நாம் நல்ல சித்த வ்ருத்திகளோடு இருக்க வேண்டும் என்ற கவலை மற்ற எவரையும் விட நமக்குத் தானே நிறைய இருக்கும்? ஆனதால், சுத்தமான வஸ்துக்களாகவே கவனமாகப் பார்த்து எடுத்து, பகவந் நாமாக்களைச் நாமே சமைத்துச் சாப்பிடுவது சொல்லிக் கொண்டு என்ற பழக்கம் வந்து விட்டால், இந்த ஆஹார சுத்தியால் சித்த சுத்தி பெறுவோம். ‘ஸ்வயம்பாகி’களுக்குத் தன்னால் உத்தமமான பண்புகள் ஸித்தித்து விடுகின்றன.

இதற்கு நான் கண்கூடாகப் பார்த்த ஓர் உதாரணம் சொல்கிறேன்.

விந்திய மலைப் பகுதிக் காடுகளில் நான் யாத்திரை செய்து கொண்டிருந்தேன். நாங்கள் ஒவ்வொரு ராஜ்யத்து வழியாகச் செல்கிற போதும், அந்தந்த ராஜ்யத்துப் போலீஸ் கான்ஸ்டபிள்கள் எங்களுக்குத் துணை வருவது வழக்கம்.

மத்யப் பிரதேசத்துப் போலீஸ்காரர்கள் தாங்களே தான் ரொட்டி செய்து சாப்பிடுவார்கள். நாங்கள் மடத்தில் சுத்தமாகத் தயாரித்து அவர்களுக்கு ரொட்டி கொடுக்கிறோம் என்று எவ்வளவோ சொல்லியும் கூட, அவர்கள் அதை ஏற்க மறுத்து, ஸ்வயம் பாகம் தான் செய்து கொண்டனர்.

விந்திய வனங்களில் எங்களுக்கு இவர்கள் தாம் முதலில் துணைக்கு வந்தவர்கள். பிற்பாடு உத்தரப் பிரதேசம் தொடங்கி விட்டது. ம.பி. போலீஸாரிடம் இருந்து காவல் பொறுப்பை வாங்கிக் கொள்ள உ.பி. போலீஸ்காரர்கள் வந்தனர். அடுத்த முகாமிலிருந்து இவர்கள் 'சார்ஜ்' எடுத்துக் கொள்ள வேண்டும். அது வரையில் இரண்டு ராஜ்யங்களின் கான்ஸ்டபிள்களுமே சேர்ந்து எங்களோடு வந்தனர்.

இரவு சுமார் பத்து மணி இருக்கும். எங்களுக்கு எதிரில் வனவிலங்குகள் சஞ்சரிக்கத் தொடங்கின.

உ.பி. கான்ஸ்டபிள் ஒருவன் தடியை வீசிக் கொண்டு அவற்றை அடிக்கப் புறப்பட்டான்.

அவனிடம் அப்போது ம.பி. போலீஸ்காரன் கூறியது என் நினைவில் என்றும் பசுமையாகப் பதிந்து இருக்கும்.

''நீ யாரோடு போகிறாய் என்பதை நினைவு வைத்துக் கொள். ஸ்வாமிஜியோடு போகிறாய். எனவே மிருகங்களை அடிக்காதே. வெறுமே பயமுறுத்தியே அவற்றை அப்பால் மட்டும் விரட்டி விடு'' என்று சொல்ல அவன் தொடர்ந்தான்.

**'ப்ராணியோம் ஸே ஸத்பாவனா ஹோ.'**

உயிரினங்களிடம் நல்லெண்ணமே இருக்கட்டும் என்று இதன் அர்த்தம்.

என் மீது விலங்கு பாய்ந்து விடப் போகிறதே என்ற கவலையில் தான் உ.பி. போலீஸ்காரன் அதன்மேல் தண்டப் பிரயோகம் செய்ய இருந்தான். அந்தச் சமயத்திலும் கூட, வாஸ்தவத்தில் அந்த தடியால் ஹிம்ஸித்து விடாமல், தடியை ஆட்டியே விரட்டும்படி ம. பி. கான்ஸ்டபிள் புத்திமதி கூறி, அவனைத் தடுத்தான். தடியால் ஒரு போடு போட்டிருக்க வேண்டியவன் சட்டென்று அதைப் பின்னுக்கு இழுத்துக் கொண்டான். மிருகமும் ஓடிவிட்டது.


போலீஸ் படையில் இருந்தும் கூட இவ்வளவு அஹிம்ஸா சித்தம் அந்த மத்தியப் பிரதேசக் கான்ஸ்டபிளுக்கு இருந்தது என்றால் அதற்கு அவனது ஸ்வயம் பாகம் தான் காரணம் என்று எனக்குத் தோன்றுகிறது.

இன்று மக்களின் மனம் பல தவறான வழிகளில் சென்றிருப்பதற்குத் தூய்மைக் குறைவான உணவு ஒரு மிக முக்கியமான காரணம். இனி மேலாவது நாம் சீரிய சிந்தனையும், ஸத்வ குண வளர்ச்சியும் பெறும் பொருட்டு ஸாத்விக உணவுப் பழக்கத்தை மேற் கொள்ள வேண்டும்.

(தொடரும்)

# அனுக்கிரஹ பாஷணம்

## பூஜ்யஸ்ரீ சங்கர விஜயேந்த்ர ஸரஸ்வதி சங்கராசார்ய ஸ்வாமிகள்



## காஞ்சி மடத்தில் ஸ்ரீஸ்ரீ பெரியவா ஜெயந்தி புஷ்பாஞ்சலியன்று (13-03-2026) ஆற்றிய அனுக்ரஹபாஷணம்

மஹாத்ரிபுர சுந்தரி ரமண சந்திர மௌலீச்வர பிரசாத ।
--------- வான்மய விபூஷிதா நிரந்தர உபாஸ்மஹே ॥

குரூர் நாம் நாம் -நமோ நம

அபார கருணா சிந்தும் ஞானதம் சாந்தரூபினம் ।
ஸ்ரீ சந்த்ரசேகர குரும் ப்ரணமாமி முதாந்வஹம் ॥

பரிச்சித்ய மௌனம்---ஸ்ரீ ஜெயேந்திரோ

ஸதாசிவ ஸமாரம்பாம் சங்கராசார்ய மத்யமாம் ।
அஸ்மத் ஆச்சார்ய பர்யந்தாம் வந்தே குருபரம்பராம் ॥

மஹா த்ரிபுரசுந்தரி சமேத ரமண சந்திரமௌலீஸ்வரரின் பிரசாதத்தால் வாக்கினால் அலங்கரிக்கப்பட்டவர் ஆகிய நாம், அவரை நித்யமும் உபாஸிக்கின்றோம்.

இன்றைய தினம் ஒரு புதுவிதமான நிகழ்ச்சியில் கலந்து கொண்டு இருக்கிறோம். இது புதுமையான நிகழ்ச்சி என்றாலும், ஜனங்களின் அபிப்ராயம், ஆகாங்க்ஷை, எதிர்பார்ப்பு ஆகியவற்றின் வெளிப்பாடாக அமைந்துள்ளது. சில சங்கல்பங்களை நாம் ஜனங்களுக்காக செய்கிறோம்; சிலவற்றை ஜனங்களே நமக்காக செய்கிறார்கள். அந்த வகையில் இது ஒரு தனித்துவமான நிகழ்ச்சி. இந்த மேடையில் இருப்பது பெரியவர்களை நினைவுகூற ஒரு வாய்ப்பாகவும் அமைந்துள்ளது. ''கொண்டாடுதல்'' என்பது ஒரு முக்கிய அம்சம். அது அபிமானம், கௌரவம், நம்பிக்கை ஆகியவற்றின் வெளிப்பாடு. அதனால் தான் உற்சவங்களை நாம் கொண்டாடுகிறோம். இப்போதும் ஒரு உற்சவத்தில் கலந்து கொண்டு வந்துள்ளோம்.

ஏனாத்தூரில் நடைபெற்ற அகில பாரதீய சாஸ்த்ரோற்ஸவத்தில், இந்தியாவின் 22 மாநிலங்களில் இருந்து 600-க்கும் மேற்பட்டோர் கலந்து கொண்டனர். தர்க்கம், மீமாம்சை, வியாகரணம், தர்மசாஸ்திரம், யோகம், சாங்க்யம் போன்ற 36 துறைகளில் அறிஞர்கள் கலந்து கொண்டு விவாதித்தனர். இது ஒரு வரலாற்றுச் சிறப்பு மிக்க நிகழ்வாகும்.

காஞ்சிபுரத்தில் இருந்த **''கடிகா ஸ்தானம்''** போன்ற பாரம்பரியத்தை மனதில் கொண்டு, பெரியவர்கள் இந்த வித்யாலயங்களை உருவாக்கினர். 1990-ஆம் ஆண்டு தொடங்கப்பட்ட இந்த விஸ்வவித்யாலயமும் ''Indian Knowledge System'' வளர வேண்டும் என்ற நோக்கத்தோடு அமைக்கப்பட்டது.

Indian Knowledge System என்பது அறிஞர்களை உருவாக்குவதோ, அவர்களுக்கு உதவி செய்வதோ மட்டுமல்ல. அதன் மூலம் இந்திய சமுதாயமே உயர வேண்டும் என்பதே முக்கிய நோக்கம். இன்று பல பட்டங்கள், கல்லூரிகள், பல்கலைக் கழகங்கள் உள்ளன. ஆனால் பண்பாடு, பொறுப்பு, பொறுமை, திறமை ஆகியவற்றுடன் கூடிய நாகரிகமான சமுதாயத்தை உருவாக்குவது மிக அவசியம்.

ஏழையோ, பணக்காரரோ, படித்தவரோ, படிக்காதவரோ - அனைவரும் பொறுப்பான மனிதர்களாக நடந்து கொள்ள வேண்டும். பொறுமையுடன் வாழும் சமுதாயமே பாரத சமூகம். இந்த 140 கோடி மக்களும் வேதாந்த சிந்தனையுடன் இணைந்து வாழ வேண்டும். வேதாந்தம் ஒரு சிந்தனை மட்டுமல்ல; அது வாழ்க்கையின் விதை,

லட்சியம். அதை அடிப்படையாகக் கொண்டு வாழ்க்கையை அமைத்துக் கொள்ள வேண்டும் என்று ஆதிசங்கரர் போதித்தார்.

இன்றைய உலகில் பல குழப்பங்கள் இருந்தாலும், இந்தியா விவேகத்துடன், பொறுப்புடன், நம்பிக்கையுடன் நடந்து வருகிறது. பிறருக்கும் நன்மை வேண்டும் என்ற எண்ணமே இந்திய சிந்தனையின் சிறப்பு.

இந்திய அறிவு முறை முழுமையாக வளர்ந்தால், அதன் தாக்கம் உலகளவில் எவ்வளவு பெரியதாக இருக்கும் என்பதை உணர வேண்டும்.

ஆதிசங்கரர் 32 வயதுக்குள் இந்திய முழுவதும் பயணம் செய்து, பக்தி, தர்மம், தானம், சதாசாரம் ஆகியவற்றை நிலை நிறுத்தினார். சமுதாயத்தில் சமநிலை உருவாக்கினார். வேதாந்தம் என்பது ஓரமாய் ஒதுங்குவது அல்ல; கடமைகளைச் செய்து கொண்டே, அகங்காரம் இல்லாமல், அலட்சியம் இல்லாமல், பொறுப்புடன் வாழ்வதே உண்மையான வேதாந்தம்.

இன்றைய சமுதாயத்தில் கௌரவம் கிடைக்கும் போது பொறுப்பும் அதிகரிக்கிறது. பெறுவது எளிது; அதற்கான பொறுப்பை ஏற்க வேண்டும். சமுதாயத்தில் சத்யம், சாத்வீகம், சரளம், சஹஜம் ஆகிய பண்புகள் நிலைக்க காரணம் வேதாந்தமே. பரம்பரை என்பது வாழ வைக்கும்; பாரம்பரியம் என்பது வளர்க்கும். இந்த உணர்வுடன் ஆசார்யர்கள் பல நிறுவனங்களை உருவாக்கியுள்ளனர்.

இன்றைய சூழலில் சாஸ்திரம் சமுதாயத்தில் இருந்து விலகாமல், சமுதாயத்திற்கே கொண்டு செல்லப்பட வேண்டும். கோவில்கள், மடங்கள் அறிவை பரப்பும் மையங்களாக மாற வேண்டும்.

முன்னோர் பல துறைகளில் சாதித்துள்ளனர் - அறிவியல், நிர்வாகம், பொருளாதாரம் போன்றவற்றில். ஆனால் இப்போது ஆத்ம தரிசனத்தின் தேவை அதிகமாக உள்ளது. லௌகீக முன்னேற்றத்துடன், ஆன்மீக முன்னேற்றமும் அவசியம். ருத்ரம், சமகம், பகவத் கீதை, லலிதா ஸஹஸ்ர நாமம் போன்றவை வாழ்க்கையில் இடம் பெற வேண்டும்.

இன்று லௌகீக கல்வியும் தேவை. அதனால் தான் ஆன்மீகத்துடன் இணைந்த கல்வி நிறுவனங்கள் உருவாக்கப்பட்டு உள்ளன. இன்னும் பல உருவாக வேண்டும். தேசத்திற்கு சுதந்திரம் கிடைத்துள்ளது. ஆனால் தர்மத்திற்கும், சமயத்திற்கும் முழுமையான சுதந்திரம் கிடைக்க வேண்டியது உள்ளது.

நாம் பொருளாதாரத்திலும், பண்பாட்டிலும் முன்னேற வேண்டும். மற்றவர்களுக்கு உதவும் நிலைக்கு வர வேண்டும்.

அதற்கான கவனம் கலாச்சாரத்தில் இருக்க வேண்டும். சிறிய சமுதாயம் என்றாலும், நல்ல சிந்தனையால் பெரிய மாற்றத்தை உருவாக்க முடியும்.

முன்னோர் நினைத்த எண்ணங்களை நாம் இன்று செயலாக்க வேண்டும். புதியதாக ஆரம்பிப்பது அல்ல; அவர்கள் எண்ணங்களுக்கு வடிவம் கொடுத்து செயல்பட வேண்டும்.

இன்னும் செய்ய வேண்டியவை நிறைய உள்ளன.

(தொடரும்)




|| श्रीः ||

|| श्रीकामकोटिप्रदीपः ||

ஸ்ரீ காமகோடி ப்ரதீபம்



ஸ்ரீ ஆதி சங்கர பரம்பராகத ஸ்ரீ காஞ்சீ காமகோடி மூலாம்நாய ஸர்வஜ்ஞ பீடம்
ஜகத்குரு பூஜ்யஸ்ரீ சங்கராசார்ய ஸ்வாமிகள் அனுக்ரஹத்துடன்,
ஸ்ரீ காமகோடி கோசஸ்தானத்தால் வெளியிடப்படும் மாதாந்திர பத்திரிக்கை






SRI KAMAKOTI KOSASTHANAM
SCAN & PAY

சந்தா விபரம்

| | |
|---|---|
| ஒரு வருடம் - ரூ.220/- | மூன்று வருடம் - ரூ. 600/- |
| ஐந்து வருடம் - ரூ. 1000/- | ஆயுள் சந்தா - ரூ. 5000/- |

UPI ID : 6005671674skk@indianbk

சந்தாவினை புதுப்பிப்பவர்கள் மற்றும் புது சந்தாவிற்கு QR code மூலம் பணம் செலுத்தி, பெயர், விலாசம், கைப்பேசி எண் மற்றும் சந்தா தொகை வங்கி பரிமாற்ற விபரத்துடன் அனுப்பி வைக்க கேட்டுக் கொள்கிறோம். kamakotipradeepam@gmail.com அல்லது + 91 90038 45456 (WhatsApp)

# ३. ஸ்ரீ ஸூத ஸம்ஹிதை என்று அழைக்கப்படும் ப்ஶ்ருதி ஸம்ஹிதையின் தமிழ் விளக்கவுரை.

*ஸு. ஸுதர்ஶன கனபாடிகள்*
மதுரை

## २) पाशुपतव्रतम् 2. பாஶுபதவ்ரதம்

இரண்டாம் அத்யாயத்தில் பாஶுபதவ்ரதம் சொல்லப்படுகிறது.

அந்தர்தானமடைந்த (மறைந்த) மஹேஶ்வரரை விஷ்ணு முதலான தேவர்கள் மறுபடியும் தரிஶிப்பதற்காகவும் ஜகத் காரணத்தை தெரிந்து கொள்வதற்காகவும் கை கால்களை அலம்பி பவித்ரர்களாக ஆசமனம் செய்து அக்னி ஹோத்ரத்தில் உண்டான (ஆஹவநீய பஸ்ம) பஸ்மத்தை (விபூதியை) எடுத்து முதலில் ஶிரஸ் முதல் பாதம் பர்யந்தம் உத்தூளனம் (ஜலம் இல்லாமல் தடவுதல்) செய்து **ओमापो।ज्योतीरसः** என்ற மந்திரத்தினால் ஜலாபிமான தேவதையான விஷ்ணுவை த்யானித்து அந்த பஸ்மத்தை (விபூதியை ) **अग्निरिति भस्म, वायुरितिभस्म, जलमितिभस्म, स्थलमितिभस्म, व्योमेतिभस्म, सर्वं ह वा इदं भस्म, मन इत्येतानि चक्षूंषि भस्मानि** என்ற ஜாபாலோபநிஷத் மந்த்ரத்தினால் அபிமந்த்ரணம் செய்து (மந்திரித்தல்) ஜலத்தினால் குழைத்து ஶிரஸ்ஸில் நெற்றியில், ஹ்ருதயத்தில், வயிற்றில், இரண்டு கைகளில் தோள்களில், த்ரிபுண்ட்ர தாரணம் செய்து பின்னர் விஷ்ணு முதலான தேவர்கள் கைகளை உயர்த்தி ஸர்வக்ஞரான மஹேஶ்வரரை மனதில் த்யானித்து விராகர்களாக (பற்றற்றவர்களாக)அதர்வ ஶிரோபநிஷத், ருத்ரம், சமகம், பஞ்சாக்ஷர ஜபம், ப்ரணவஜபம் முதலியவைகளால் ஸ்துதித்து பூஜித்தனர் .

எந்த ஸ்வரூபமானது வேதாந்த வாக்யங்களினால் பார்க்கபடுகிறதோ, துராசாரம் உள்ளவர்களால் பார்க்க முடியாமல் இருக்கிறதோ, அப்படிப்பட்ட திவ்ய ஸ்வரூபமாக பகவான் அப்பொழுது உமா மஹேஶ்வரராக அவர்களுக்கு காக்ஷி தந்தார்.

**अहमेव परं तत्त्वं मत्तो जातं जगत् सुराः ।**
**मय्येव संस्थितं नष्टं मत्समो नाधिकः सदा ।।**

**मत्स्वरूपपरिज्ञानादेव संसारनिर्हतिः ।**
**मम ज्ञानं च वेदान्तश्रवणादेव जायते ।। (सूतसंहिता)**

**(यतो वा इमानि भूतानि जायन्ते । येन जातानि जीवन्ति। यत् प्रयन्त्यभिसंविशन्ति )**

**(यजुर्वेदे)**

நானே மேலான தத்வம், என்னிடமிருந்து உண்டான இவ்வுலகம், என்னால் நிலைபெற்று என்னாலேயே கடைசியில் அழியும். என்னைக் காட்டிலும் மேலானவர் இல்லை. என் ஸ்வரூப ஞானத்தினாலேயே ஸம்ஸார நிவ்ருத்தி ஏற்படும். வேதாந்த ஶ்ரவணத்தினால் மட்டுமே என் விஷயமாயுள்ள ஞானம் புலப்படும். (மோக்ஷத்தை விரும்பியவனும், ஸத்வ்ரதங்களை அனுஷ்டிப்பவனும், ஶாந்தமானவனும், நல் ஆத்மாவானவனும், ஸ்வ ஆஶ்ரமத்தில் சொன்ன கர்மாக்களை நன்றாக செய்து கர்மபலனை த்யாகம் செய்தவனும், எப்பொழுதும் என்னையே (மஹேஶ்வர) த்யானிக்கிறவனும், யாகம், தானம், முதலானவைகளினால் மஹாபாபங்களை போக்கியவனும் ஆன ஒருவனுக்கே என் விஷயமாயுள்ள ஞானம் ஏற்படும்.)

இப்படியாக எவன் ஒருவன் என்னை அறிகிறானோ அவன் மட்டுமே அனைத்தையும் அறிகிறான். இந்த ஞானத்தினால் உங்களுக்கு ஏற்பட்ட ஸம்ஶயம் (ஸந்தேஹம்) நிவ்ருத்தியாகும். இந்த பாஶுபத வ்ரதத்தை எவர்கள் ஶ்ரத்தையுடன் செய்கிறார்களோ அவர்களுக்கு மட்டுமே வேதாந்த உபதேஶம் செய்ய வேண்டும் என்பது ஶாஸ்த்ர ஸம்மதம். இவ்வாறாக கூறிய பின் உமா மஹேஶ்வரர் மறுபடியும் அந்தர்தானம் அடைந்தார். விஷ்ணு, ப்ரஹ்மா, இந்திரன் முதலான தேவர்கள் அவரவர்களின் கார்ய ஜனன ஸாமர்த்யம் மஹேஶ்வரருடைய அனுக்ரஹமே என்று உணர்ந்தனர்.

**ஸூதர் :** ஆகையால் மஹர்ஷிகள் நீங்கள் அனைவரும் ஸர்வக்ஞரான பரமேஶ்வரரே ஜகத்திற்கு காரணம் என்று அறிந்து அவரை உபாஸியுங்கள். உங்களுக்கு அவர் ப்ரஸன்னமாகி இஷ்ட வரங்களை தருவார் என்று கூறினார்.

**குறிப்பு :** இங்கு சொல்லப்பட்ட பாஶுபத வ்ரதம் பற்றிய முக்கியமான தகவல்கள் மற்றும் பஸ்ம (விபூதி) மஹிமை அவ்வப்போது இடையிடையே கூறப்படும்.

**மந்திரமாவது நீறு வானவர் மேலது நீறு. ஸுந்தரமாவது நீறு துதிக்கப் படுவது நீறு. தந்திரமாவது நீறு ஸமயத்தில் உள்ளது நீறு. செந்துவர் வாயுமை பங்கன் திருஆலவாயான் திருநீறே. (ஞானஸம்பந்தர்)**

**अग्निरित्यादिना भस्म गृहीत्वा विमृज्य अङ्गानि संस्पृशेत् । ततः त्रिपुण्ड्रं धारयेत् । (अथर्वशिरोपनिषत्)**

அக்னிரிதி பஸ்ம முதலான மந்த்ரங்களினால் விபூதியைக் கொண்டு உடம்பில் தடவிக் கொண்டு பிறகு ஜலம் சேர்த்து த்ரிபுண்ட்ரமாக இட்டுக் கொள்ள வேண்டும்.

**आयुष्कामोऽथवा विद्वान्भूतिकामोऽथवा नरः ।**
**नित्यं वै धारयेद् भस्म मोक्षकामी च वै द्विजः**
**त्रिपुण्ड्रं परमं पुण्यं ब्रह्मविष्णुशिवात्मकम् ।**
**ये घोरा राक्षसाः प्रेता ये चान्ये क्षुद्रजन्तवः ।।।**
**त्रिपुण्ड्रधारणं दृष्ट्वा पलायन्ते न संशयः । देवीभागवते**

நீண்ட ஆயுளை விரும்புபவன் அல்லது செல்வத்தை (ஐஶ்வர்யத்தை) விரும்புபவன் யாராக இருந்தாலும், அவர் தினமும் விபூதியை அணிய வேண்டும். அதேபோல், முக்தியை விரும்பும் அந்தணர்களும் கண்டிப்பாக விபூதியை அணிய வேண்டும். த்ரிபுண்ட்ரமானது ப்ரஹ்ம, விஷ்ணு ஶ்வரூபமாக உள்ளது. கோரமான ராக்ஷஸர்களும், ப்ரேதங்களும், கெட்ட ஜந்துக்களும், த்ரிபுண்ட்ரத்தை பார்த்து பயந்து ஓடி விடுகின்றன.

(தேவீபாகவதம்)

**भूत्यै न प्रमदितव्यम् (यजुर्वेदे)**

விபூதியை அலக்ஷ்யம் செய்யக் கூடாது.

(தொடரும்)

ஜய ஜய சங்கர உ ஹர ஹர சங்கர

ஸ்ரீ

தர்மோ ரக்ஷதி ரக்ஷித:

## ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடம்

சீடர்களின் கவனத்திற்கு

**ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடம் ஜகத்குரு ஸ்ரீ சங்கராச்சார்ய ஸ்வாமிகளின்**

சீடர்களாகிய நாம் நமது குடும்பத்தில் அவ்வப்பொழுது நடைபெறும்
சுபநிகழ்ச்சிகளுக்கு பத்திரிகைகள் தயார் செய்யும்போது
கீழ்க்கண்ட வாசகங்களை முதலில் அமைப்பது சாலச் சிறந்ததாகும்.

**“ஸ்ரீ மஹா த்ரிபுரசுந்தரி ஸமேத ஸ்ரீ சந்திர மௌளீஸ்வர ஸ்வாமி க்ருபையுடன்,**
**ஸ்ரீ ஆதிசங்கர பகவத்பாதாள் பரம்பராகத மூலாம்நாய ஸர்வக்ஞபீடம்**
**ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடாதிபதி ஜகத்குரு ஸ்ரீ ஸ்ரீ ஸ்ரீ சங்கராச்சார்ய**
**ஸ்வாமிகள் பரிபூரண அனுக்ரஹத்துடன்**

# அநுகீதாபர்வம்

## (இருபத்தெட்டாவது அத்யாயம்)

அநுகீதா பர்வம் (தொடர்ச்சி.)

(வித்தையையும் பிரம்மத்தையும் வனமாகச் சொல்லும் பிராம்மண தம்பதிகளின் ஸம்பாஷணை.)

அந்த விருக்ஷத்திற்கு உயரத்திலும், ஆழத்திலும், குறுக்கிலும் முடிவு அறியப்படுகிறது இல்லை. (பிரஜ்ஞையாகிற விருக்ஷத்தை அடைந்த) அவனிடத்தில் உண்மையாக இருப்பவர்களும் (புருஷனை வசப்படுத்த முடியாமல் வெட்கித்) தலை குனிந்தவர்களும் ஒளி பொருந்தினவர்களும் (மற்ற) ஜனங்களைவிடச் சிறந்தவைகளாக எல்லா விஷயானந்தங்களையும் எடுத்துக் கொடுப்பவர்களுமான (கிராண முதலானவைகளால் உண்டான விருத்திகளாகிற) ஏழு ஸ்திரீகள் ஸஞ்சரிக் கின்றனர். (ஞானிக்கு உண்டாகும் ஸுகமும், மூடனுக்கு உண்டாகும் ஸுகமும்) நித்யமான பொருளும், அநித்யமான பொருளும் போல வேற்றுமை உள்ளவை. அந்த ஞானி இடத்திலேயே (மனம், புத்தி, ஐம்புலன்கள் என்னும்) ஏழுகளாகிற ஸப்த ரிஷிகளும், ஸித்தர்களும், செல்வம் நிறைந்தவர்களும் லயமடைகின்றனர். மறுபடியும் அவன் இடத்திலேயே உண்டாகின்றனர்.

நிலைபெற்ற தேஜஸுள்ள இந்த ஞானிக்குக் கீர்த்தியும், பிரகாசமும், செல்வமும், வெற்றியும் உண்டாகின்றன. ஏழு ஜோதிகளும் இந்த ஞானியாகிற ஸூர்யனையே அனுஸரிக்கின்றன. அவனிடத்தில் ரிஷிகளும், மலைகளும், பிரம்மத்தின் இடமிருந்து உண்டான ஜலத்தை நாற்புறங்களிலும் பெருக்கும் நதிகளும் சேர்ந்து இருக்கின்றனர்.

யோகமென்னும் யாகம் செய்யும் இடமும் மிக்க ரஹஸ்யமுமான ஹிருதயாகாசத்தில் நதிகளுடைய ஸங்கமமும் இருக்கிறது. தம் ஆத்மாவில் திருப்தி அடைந்தவர்கள் அதிலிருந்து ஸாக்ஷாத் பிதாமஹரையே அடைகின்றனர். ஆசையற்றவர்களும், நல்ல விரதமுள்ளவர்களும், சாந்தர்களும் தவத்தால் பாவத்தை எரித்தவர்களுமான பிராம்மணர்கள் மனத்தைப் பரமாத்மாவின் இடத்தில் செலுத்தி அவரை உபாஸிக்கின்றனர்.

வித்தையாகிற அரண்யத்தை அறிந்த ஜனங்கள் இந்த விஷயத்தில் இந்திரியங்களின் அடக்கத்தையே (மேலானதென்று) புகழ்கின்றனர். அந்த அரண்யத்தை அடைந்தவன் உண்மையை மீறாதவன் ஆகிறான். பிராம்மணர்கள் இப்படிப்பட்ட இந்த

அரண்யத்தையே புண்ணியமாக அறிகின்றனர். அறிந்து, பரிபாலோசனை உள்ள ஆத்மாவினால் (சம முதலானவைகளையும்) அனுஷ்டிக்கின்றனர்.

# இருபத்தொன்பதாவது அத்யாயம்.

(யாகத்தில் செய்யும் ஹிம்ஸை தோஷமாகாது என்பதைப்பற்றி
அத்வர்யுவுக்கும், யதிக்கும் ஸம்பாஷணை)

பெண்ணே! நான் கந்தங்களை மோப்பது இல்லை; ரஸங்களை அறிகிறது இல்லை; ரூபத்தைப் பார்க்கிறது இல்லை; (ஸ்பரிசத்தைத்) தொடுகிறது இல்லை; பலவித சப்தங்களையும் கேட்கிறது இல்லை; ஒருவித ஸங்கல்பத்தையும் அடைகிறது இல்லை. விருப்பும், வெறுப்பும் உண்டாகாமலிருக்கும் பொழுதும் பிராணனும், அபானனும் இயற்கையாகப் பிராணிகளின் சரீரங்களில் பிரவேசித்து (ஆகாரத்தைப் பாகம் செய்வது முதலான காரியங்களைச் செய்வது போலப் புத்தி முதலானவைகளின்) இயற்கையே இஷ்டமான பொருள்களை விரும்புகிறது. இயற்கையே பகைக்கத் தக்கவைகளை எல்லாம் பகைக்கிறது. (ஜாக்ரதவஸ்தையிலுள்ள க்ராணம், க்ரேய முதலான) அந்தப் பதார்த்தங்களைக் காட்டிலும் வேறான (ஸ்வப்னா அவஸ்தையிலுள்ள) பதார்த்தங்களையும் அவற்றிலுள்ள நித்யமான ஸ்வபாவங்களையும், பரமாத்மாவையும் நான் சரீரத்தில் பார்க்கிறேன். அந்தப் பரமாத்மாவின் இடத்தில் நிலை பெற்றிருக்கும் நான் எவ்விதத்திலும் (மற்றவைகளில்) பற்றுதல் அடைய மாட்டேன்.

காமமும், குரோதமும், ஜரையும், மரணமும் என்னைத் தொடர மாட்டா. விரும்பத் தக்கவைகளை எல்லாம் விரும்பாதவனும் தோஷங்களை எல்லாம் பகைக்காதவனுமான எனக்கு ஜலத்திவலைக்குத் தாமரை இலைகளில் பற்றுதல் உண்டாகாததுபோல ஸ்வபாவங்களில் பற்றுதலுண்டாகிறது இல்லை. அனேக ஸ்வபாவங்களைப் பார்ப்பவனும் நித்யனுமான இவனுடைய (காமங்கள்) நித்தியங்களாகும். கர்மங்களைச் செய்தாலும், இவனைப் போகங்களின் ஸமூகமானது ஸூரியனுடைய கிரணங்களின் ஸமூகமானது ஆகாயத்தைப் பற்றாதது போலப் பற்றுகிறது இல்லை.

புகழ்பெற்றவளே! இந்த விஷயத்திலும் அத்வர்யுவுக்கும், யதிக்கும் நடந்த ஸம்வாதமும் புராதனமுமான இந்த இதிஹாஸத்தை உதாஹரிக்கின்றனர். அதனைத் தெரிந்து கொள். யாக கர்மாவில் புரோக்ஷிக்கப்படுகின்ற பசுவைக் கண்டு அருகிலிருக்கும் ஒரு ஸந்யாஸி அத்வர்யுவை நோக்கி, ‘இது ஹிம்ஸை’ என்று நிந்தித்துக் கூறினார். அத்வர்யுவானவர் அவரை நோக்கி, இந்த ஆடென்னும் பிராணியானது கெடுதலை அடையாது யாகத்தால் மேன்மையை அடைகிறது. வேதம் அவ்விதம் கூறுகிறது.

(தொடரும்)

# சிவனடியார்கள் சரித்திரம்

*கலை ராம வெங்கடேசன்*

## 2. இயற்பகை நாயனார்



இயற்பகையார் சோழ நாட்டின் செழுமையான தலைநகரமாம் பூம்புகாரில் வாழ்ந்த பெரு வணிகர் ஆவார். இவர் சிவபெருமானை வணங்கி வழிபடும் அடியார்களுக்கு பக்தியுடன் தொண்டு புரிந்து வந்தார். குறிப்பாக உடல் முழுவதும் புனிதமான திருநீறு பூசிய சிவனடியார்களிடத்தில் ஆழ்ந்த பக்தி செலுத்தி வந்தார்.

கொடையின் மறுவடிவமாகத் திகழ்ந்தாலும் இயற்பகையார் சில சமயங்களில் விசித்திரமானவராகவும் இருந்தார். மனைவி, மக்கள், செல்வங்கள், தாம் உட்பட அனைத்தும் அடியார் உடைமை என்ற திடமான கொள்கையுடன் வாழ்ந்தார். செயற்கரிய பெருஞ்செயல் செய்த இவரை உலகில் வாழும் சாமான்ய மனிதர்களை அளவிடுகின்ற சட்ட திட்டங்களைக் கொண்டு அளவிட முடியாது என்பதால் இவர் இயற்பகையார் ஆனார். சிவனடியார்கள் என்ன கேட்டாலும் யோசிக்காமல் கொடுத்துவிடும் வினோதமான பழக்கத்தை கொண்டிருந்தார். எனவே சிவபெருமான் இவருக்கு மிக நெருக்கமானவராக இருந்தார். சிவனடியார் யாவரும் இவர்மீது மதிப்பும் மரியாதையும் கொண்டிருந்தனர். அவர் மிகப்பெரும் செல்வந்தராக இருந்தாலும் தன்னிடமிருந்த செல்வத்தின்மீது சிறிதும் நாட்டமில்லாமல் இருந்தார். இறைவனும் ஏழை எளியோர்களுக்கு செல்வத்தை வாரி கொடுப்பதற்காகவே மிகுந்த செல்வங்களை இவருக்குத் தந்தருளினார்.

இயற்பகையாரின் மனைநல்லாள் பேரழகு படைத்த நங்கை ஆவார். கணவனுக்கு பணிவிடை செய்து தன் வாழ்க்கையை அர்பணித்து வந்தாள். ஒருமுக சிந்தனையுடன் பக்திபூண்டு வாழ்ந்த இருவரையும் சோதிக்க சிவபெருமான் திருவுள்ளம் கொண்டார்.

ஒருநாள் மேனி முழுதும் திருநீறு பூசிய மறையவர் ஒருவர், நாயனார் மற்றும் அவர்தம் மனைவியார் முன் தோன்றினார். அவர்கள் அப்பெருமகனாரை வணங்கி, வரவேற்று உபசரித்தனர். இறுதியாக, மறையவர் புறப்படும்முன், அவர் வேறு எதையோ எதிர்பார்த்திருந்ததை நாயனார் உணர்ந்தார். மறையவர் தயங்கி நின்றதை கண்ட நாயனார், விரும்புவது எதுவாக இருந்தாலும் தயங்காமல் கேட்கும்படியும், அதை மறையவருக்கு தான் உடனே சொந்தமாக்கித் தர சித்தமாக இருப்பதாகவும் கூறினார்.

இதைக் கேட்ட மறையவரோ, தான் ஒரு பெண் துணையை எதிர்பார்த்திருப்பதாகவும், இயற்பகையாரின் இனிய இல்லாளையே தனது இன் துணையாக கொள்ள விரும்புவதாக் கூற, இயற்பகையாரும் மறுப்பின்றி உடன் சம்மதித்தார். அகத்தினுள் சென்று தன் மனையாளை அழைத்து வந்து மறையவருக்கு தான் கொடுத்த உறுதி மொழியையும் எடுத்துரைத்தார்.

இதைக் கேட்ட இயற்பகையாரின் மனைவியார் அதிர்ச்சியும் திகைப்பும் அடைந்தாள். ஒரு புதியவருக்கு தான் ஒப்படைக்கப்பட்டு இருப்பது அவளது இதயத்தை சுக்கு நூறாக உடைத்தது. இருப்பினும் கணவனை கீழ்ப்படிய மறுக்க மனம் இல்லாமல் அவனது கட்டளையை ஏற்று, இதுவும் சிவபெருமானின் விசித்திரமான தண்டனை ஆகும் என்று எண்ணி மறையவருடன் சென்றாள். அன்பும் கொடையுமே வாழ்வின் தாரக மந்திரமாகக் கொண்டு வாழும் தன் கணவரின் மனநிலையை அவள் நன்கு உணர்ந்திருந்தாள்.

நாயனாரின் இச் செய்கையை கண்டு மறையவர் மிகவும் மகிழ்ந்தார். இருப்பினும் அவரது தேவைகளும் விருப்பங்களும் இன்னும் ஒருபடி மேலே சென்றது. தான் வேறொருவரின் மனைவியுடன் வெளியில் செல்வதை ஊரார் பார்த்தால் கிளர்ந்து எழுந்து தொல்லை கொடுப்பார்கள் என்றும், இதை எளிதாக்குவதற்கு இயற்பகையாரே தனக்கு மெய்க்காப்பாளனாக வரவேண்டும் என்றும் கேட்டுக் கொண்டார்.

இயற்பகையாரின் தொண்டு உள்ளம் எல்லை இல்லாதது. பெருமனதுடன் உடன் அதற்குச் சம்மதித்தார். இந்த பரபரப்பான செய்தி ஊர் முழுவதும் காட்டுத்தீப் போல பரவியது. கிராம மக்கள் அனைவரும் பெருஞ் சீற்றத்துடன் திரண்டனர். நாயனாரின் இந்த வினோதமான செய்கையைக் கண்டு வாயடைத்து நின்றனர். நாயனாருக்குத் தொண்டு புரிந்தவர்களும் அவரிடத்தில் பெருமதிப்பு வைத்திருந்தவர்களும் அவரது அதிர்ச்சியூட்டும் இச் செய்கையைக் கண்டு வெட்கித் தலைகுனிந்தனர். இது அந்த ஊருக்கே இழைக்கப்பட்ட அவமரியாதை என்றும், இதை அனுமதிக்க மாட்டோம் என்றும் உறுதி பூண்டனர். மறையவர் சென்ற பாதையைத் தடுத்து படுபாதகமான இக் குற்றத்தை எதிர்த்து உயிருள்ளவரை போராடத் துணிந்தனர்.

இதைக் கண்ட இயற்பகையார் தன்னுடைய கடைமையை நிறைவேற்ற ஒத்துழைப்பு நல்குமாறு வெகுண்டு எழுந்த ஊர் மக்களிடம் மன்றாடினார். இவரது கோரிக்கையை ஊர் பொதுமக்கள் ஏற்க மறுக்கவே பெருஞ்சீற்றங் கொண்ட இயற்பகையார், கோபக்கனல் பொங்க, வழியில் எதிர்வருவோர் அனைவரையும் தனது வாளால் தனி ஒருவனாக நின்று வெட்டிச் சாய்த்தார். பெருங் கூட்டமாக வந்து தடுத்து போரிட்டவர்களை தனது பக்தியின் வலிமையால் வென்றார்.

பிறகு மறையவர் தனது வழியில் எளிதாகச் சென்றார். அவர்கள் ஊரின் எல்லைப் பகுதியை அடைந்து சாய்க்காடு என்னும் வனப்பகுதிக்குள் நுழைந்ததும், மறையவர் இயற்பகையார் செய்த உதவிக்கு நன்றி தெரிவித்து, அவரை திரும்பி செல்லுமாறு பணித்தார்.

இயற்பகையார் மறையவருக்கு தலைவணங்கி மரியாதை செய்து விட்டு தனது ஊருக்கு திரும்பிச் செல்ல முற்பட்டார். சிறிது தூரம் சென்ற அவருக்கு காட்டிலிருந்து ‘இயற்பகை முனிவா ஓலம்! ஈண்டு நீ வருவாய் ஓலம்!‘ என்று மறையவரின் நெஞ்சைப் பிளக்கும் அலறல் ஒலி கேட்டது. எந்த இடத்தில் தன் மனைவியையும் மறையவரையும் விட்டுச் சென்றாரோ அந்த இடம் நோக்கி விரைந்து சென்றார். அங்கு அவருக்குப் பரவசமான காட்சி கிடைக்க காத்திருந்தது. அவரது மனைவி சிவபெருமானும் பார்வதியும் ரிஷப வாகனத்தில் இருந்தபடி அருள்மழை பொழியும் அற்புதக் காட்சியைக் கண்டு ஆனந்த களிப்புடன் இருந்தாள். இயற்பகையாரும் இத்தெய்வீக காட்சியைக் கண்டு காதலாகிக் கசிந்து கண்ணீர் மல்கி அம்மையப்பரை தொழுது வணங்கினார்.

சிவபெருமான் பார்வதி தேவியுடன் இத்தெய்வீக தம்பதியினருக்கு அருள்புரிந்து அவர்களை மேலும் மகிழ்விக்குமாறு தனது பொன்மயமான சிவ உலகிற்கு அழைத்துச் சென்று தன்னருகே அமர்த்திக்கொண்டார். இவருடன் பகைத்து போரில் இறந்துபட்ட ஊர்மக்களும் வீரசொர்க்கம் அடைந்தனர். தேவர்கள் பூ மாரி பொழிந்து இயற்பகையார் மற்றும் அவர்தம் மனைவியாரின் சீரிய பக்தியையும் சிறந்த தன்னலமற்ற தொண்டினையும் பலவாறு போற்றிப் புகழ்ந்தனர்.

இறைவனிடம் ‘தான்’ என்ற ஒரு பொருளை இழந்த நிலையில், மனைவி, மக்கள் என்ற உறவும், உறவுக்குரிய பிறபொருள்களோ எதுவுமில்லை என்றுணர்ந்து, இறைவன்பால் உணர்ச்சி மிகுதியால், தீரா காதல் கொண்டு, தற்போகத்தை இழந்து இறையருளை இயைந்து பெற்ற இயற்பகையாரின் இணையடி போற்றுவோம்.


திருச்சிற்றம்பலம்


ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடத்தின் 70-வது பீடாதிபதி
**ஜகத்குரு பூஜ்யஸ்ரீ சங்கர விஜயேந்திர சரஸ்வதி ஸ்வாமிகளின்**
ஜெயந்தி மஹோத்ஸவம்


























# ஸ்ரீ பாதஸப்ததி 14

ஸ்ரீ மேல்பத்தூர் நாராயண பட்டத்ரி இயற்றியது

பி. ஆர். கண்ணன்

**ஸந்நாமேஷு பவத்பதா²ம்புஜநகச்சாயாம் ஜடாஸங்கிநீம்**
**கங்கேத்யாலிஜநா வதந்தி விததம் மா பூர் முதாகோபிநீ ।**
**த்ரு'ஷ்டிர்மய்யபநீயதாம் பருஷமப்யேகம் வசோ தீயதா-**
**மீஶாநஸ்ய பவாநி தே பதநதாவித்தம் ஜயந்த்யர்த்தநா: ॥ 67॥**

67. 'பவானி! ஈசானர், உங்கள் காலடியில் பணிந்து இவ்வாறு பிரார்த்தனை செய்கிறார்: (காதல் சண்டையின் போது உன்னை சமாதானம் செய்வதற்காக) நான் உனது பாதங்களில் பணிந்து நிற்கும் போது, உனது தாமரை பாதங்களில் உள்ள நகங்களின் பிரகாசம் என் தலையில் உள்ள ஜடாமுடிடன் கலந்தது. உன் சேவகர்கள் இதை கங்கை என்று தவறாக அழைக்கிறார்கள். தேவையில்லாமல் கோபப்பட வேண்டாம். தயவு செய்து என் மீது ஒரு பார்வை வை; குறைந்தபட்சம் ஒரு வார்த்தை பேசு, ஒரு கொடூரமான வார்த்தையாவது. ஈசானரின் பிரார்த்தனை பலனளிக்கிறது.'

ஸ்ரீ நாராயண பட்டத்ரி, பார்வதி சிவன் மீது கோபம் கொள்வதற்கான இயற்கையான காரணத்தை வெளிப்படுத்துகிறார், ஏனெனில் அவர் தனது போட்டியாளரான கங்கையை தன் தலையில் அணிந்துள்ளார். அதை சிவன் சாதுரியமாக விளக்கினார்.

**ஆதி சங்கரர் பவானி புஜங்க ஸ்துதியில் கூறுகிறார்:**

**'கணேசா-ணிமாத்யா-கிலை: சக்தி-பிருந்தைர்-**
**வ்ருதா வை ஸ்புரச்-சக்ர-ராஜோல்-லஸந்தீம் ।**
**பரம் ராஜராஜேஸ்வரி த்ரைபுரி த்வாம்**
**சிவாங்கோபரிஸ்தாம் சிவாம் பாவயாமி ॥'' (11)**

''ராஜ ராஜேஸ்வரி! திரிபுரசுந்தரி! சங்கரி, விநாயகர் மற்றும் அணிமா போன்ற சக்திகளின் கூட்டத்தால் சூழப்பட்டவளே, (அணிமா என்பது எட்டு பிரபலமான சித்திகளில் முதன்மையானது), ஒளிமிக்க ஸ்ரீ சக்கரத்தின் மீது பிரகாசிக்கும், சிவனின் மடியில் அமர்ந்திருக்கும் யாவரிலும் உயர்ந்தவருமான, உங்களை நான் தியானிக்கிறேன்.''

**நாபீதோऽபவமாதிதஸ்தவபலாத் பஶ்சாதபீதோऽஸ்ம்யஹம்**
**த்ர்யக்ஷேண த்ரிமுகீக்ரு'தோऽபி சதுராஸ்யோऽஹம் தவைவ ஸ்தவை: ।**
**த்வம் விஶ்வாத்மதயோபஜந்ய ந புந: ஸ்ரஷ்டாரமாக்யாஹி மா-**
**மித்தம் தேவி ஜயந்தி தே பதநதௌ வாணீபதேர்வாணய: ॥ 68॥**

68. ''தேவி! பிரம்மா (வாணீபதி) உமது பாதங்களில் பணிந்து பிரார்த்தனை செய்கிறார்: ''ஆரம்பத்தில், நான் பயத்திலிருந்து விடுபடவில்லை. உனது அருளின் வலிமையால், நான் பின்னர் பயத்தை விட்டுவிட்டேன். நான் சிவனால் (மூன்று கண்களை உடையவர்) உருவில் குறை செய்யப்பட்டு இருந்தாலும், (நான்கு வேதங்களின் வடிவில்) உங்களைப் புகழ்ந்ததால் எனக்கு நான்கு முகங்கள் (அல்லது புத்திசாலித்தனமான பேச்சு) உள்ளன. நீங்கள் முழு பிரபஞ்சத்தைம் உருவாக்கி வியாபிக்கிறீர்கள்; எனவே என்னை படைப்பாளர் என்று அழைக்க வேண்டாம்.' பிரம்மாவின் பிரார்த்தனை பலனளிக்கிறது.'

தேவியின் அருளால் விஷ்ணுவால் கொல்லப்பட்ட அசுரர்களான மது மற்றும் கைடபர் ஆகியோரால் பிரம்மாவின் பயம் ஆரம்பத்தில் இருந்தது. விஷ்ணுவின் தொப்புளுடன் அவரது தாமரை இருக்கையின் இணைப்பின் நிலையற்ற தன்மையால் அவரது பயம் எழுவதாகவும் விளக்கலாம். சிவனால் பிரம்மாவுக்கு தண்டனை பற்றிய குறிப்பு புராணங்களில் இருந்து வருகிறது. ஒருமுறை சிவன் ஒரு ப்ரகாச ஸ்தம்பமாக பிரம்மாண்டமான வடிவத்தை எடுத்துக் கொண்ட போது, பிரம்மா ஒரு அன்னத்தின் வடிவத்தை எடுத்து அவரது தலையைத் தேடினார். அவர் தோல்வியுற்றார், ஆனால் சிவனின் தலையைப் பார்த்ததாக சிவனிடம் பொய் சொன்னார். கோபமடைந்த சிவபெருமான் பிரம்மாவின் ஐந்து தலைகளில் ஒன்றை அகற்றினார், அது முதல் நான்கு தலைகளாக மாறியது.

**தேவி பாகவதத்தில் தேவி பிரம்மாவிடம் அறிவுறுத்துகிறார்:**

**''கிம் நாஹம் பஶ்ய ஸம்ஸாரே மத்-விக்தம் கிமஸ்தி ஹி ।**
**ஸர்வமேவ-அஹமித்யேவம் நிஶ்சயம் வித்தி பத்மஜ ॥**
**க்ருஹாண-அஜ மஹத்-தத்வம்-அஹங்காரஸ்-ததுத்பவ: ।**
**ததா: ஸர்வாணி பூதானி ரசயஸ்வ யதா புரா ॥ (3:6:11,30)**

''தாமரையில் பிறந்த பிரம்மனே! இந்த உலகில் நான் இல்லாத எதைம் நான் காணவில்லை. எல்லாவற்றிலும் நான் மட்டுமே இருக்கிறேன். இதை உறுதியாக அறிந்து கொள்.

பிரம்மனே! மஹத் தத்வத்தைம் அதன் சந்ததியான அஹங்காரத்தைம் உள்வாங்கு. எனவே அனைத்து உயிரினங்களைம் முன்பு போல் உருவாக்கு.

**ஆஶீரஸ்தி முகே விடம்பயதி மாம் பூயோ ऽபி சாஶீ:ஸ்ப்ரு'ஹா**
**போகா: ஸந்திஸஹஸ்ரதா புநரஹம் போகாந் கதம் ப்ரார்த்தயே ।**
**ஶேஷோऽஹம் ஸ்ப்ரு'ஹயாம்யஶேஷஸுகமித்யேதச்ச ஹாஸாஸ்பதம்**
**நாதே சிந்தய ஸர்வமித்யஹிபதேஸ்த்வத்பாதபாதோ ஜயேத் ॥ 69 ॥**

69. ''ஈஶ்வரி! உமது பாதங்களில் பணிந்து நிற்கும் சர்ப்பத் தலைவனின் (சேஷன்) பிரார்த்தனைகள்: என் வாயில் பிரார்த்தனை (அல்லது பற்கள்) (ஆஶீ:) உள்ளது. உங்கள் ஆசீர்வாதத்தை நான் விரும்பினால் (ஆஶீ:), நான் கேலி செய்யப்படுவேன். என்னிடம் ஆயிரக்கணக்கான இன்பங்கள் (அல்லது கோரைப்பற்கள்) உள்ளன (போக:); பிறகு எப்படி நான் இன்பத்திற்காக ப்ரார்த்திக்க முடிம். நானோ சேஷன்; நான் மகிழ்ச்சிக்காக ஏங்கினால், அதாவது முழுமையான மகிழ்ச்சி (அசேஷ-சுகம்), மீண்டும் நான் அவமானத்திற்கு ஆளாவேன். சேஷனின் பிரார்த்தனை பலனளிக்கிறது.'

சேஷன் தனது ஞானத்திற்கும், பேச்சின் வன்மைக்கும் பெயர் பெற்றவர். பதஞ்சலியாக, ஸம்ஸ்கிருத இலக்கணத்தை எழுதினார். இங்கே, அவர் தனது பிரார்த்தனையை வெளிப்படுத்துவதில் இந்திரனைம் மற்ற தேவர்களைம் விட சிறந்து விளங்குகிறார். ஸ்ரீ நாராயண பட்டத்ரி வார்த்தைகளில் மீண்டும் சிலேடைகளைப் பயன்படுத்துகிறார், மேலும் ஆதிசேஷனை தனது பிரார்த்தனையை வெளிப்படுத்த முடியாத ஒரு விண்ணப்பதாரரின் நிலையில் வைத்துக்காட்டுகிறார். ஒரு தாய் தன் குழந்தையின் தேவைகளை அவன் கேட்காமலேயே நிறைவேற்றுவது போல, தெய்வீக அன்னை தன் பிள்ளைகள் அனைவருக்கும் தன் ஆசிகளைப் பொழிவாள் என்பதை பெருமைமிக்க கவிஞர் வெளிப்படுத்துகிறார்.

(தொடரும்)

# ஸ்ரீமடத்தில் சித்திரை மாத விசேஷ தினங்கள்

| தேதி | கிழமை | விவரம் |
|---|---|---|
| 14-04-2026 | செவ்வாய் | மேஷ விஷு புண்யகாலம்; த்வாதசி |
| 15-04-2026 | புதன் | ப்ரதோஷ பூஜை ; ஸ்ரீ மத்ஸ்ய ஜயந்தீ |
| 19-04-2026 | ஞாயிறு | அக்ஷய த்ரிதீயை ; ஸ்ரீ பலராம ஜயந்தீ |
| 20-04-2026 | திங்கள் | காஞ்சி ஸ்ரீ சத்ய சந்த்ரஸேகரேந்த்ர ஸரஸ்வதீ ஸ்வாமிகள் ஆஸ்ரம ஸ்வீகார தினம் |
| 21-04-2026 | செவ்வாய் | ஸ்ரீ சங்கர ஜயந்தீ |
| 22-04-2026 | புதன் | ஸ்ரீ ராமானுஜ ஜயந்தீ |
| 27-04-2026 | திங்கள் | ஏகாதசி ; 2502-ம் வருஷ பகவத்பாதாள் ஆராதனை |
| 28-04-2026 | செவ்வாய் | த்வாதசி |
| 29-04-2026 | புதன் | ப்ரதோஷ பூஜை |
| 30-04-2026 | வியாழன் | பௌர்ணமி பூஜை ; ஸ்ரீ ந்ருஸிம்ஹ ஜயந்தீ |
| 01-05-2026 | வெள்ளி | ஸ்வாதி தேர் ; ஸ்வாதி வேத பாராயணம் மூலாம்னாய ஸ்ரீ காஞ்சி காமகோடிபீட ப்ரதிஷ்டாபன தினம் |
| 04-05-2026 | திங்கள் | அனுஷம் தேர் ; அனுஷம் வேத பாராயணம் |
| 06-05-2026 | புதன் | மூலம் தேர் ; மூலம் வேத பாராயணம் |
| 08-05-2026 | வெள்ளி | த்வாதசி ; உத்ராடம் தேர் ; உத்ராடம் வேத பாராயணம் |
| 10-05-2026 | ஞாயிறு | அவிட்டம் தேர் ; அவிட்டம் வேத பாராயணம் |
| 11-05-2026 | திங்கள் | காஞ்சி ஸ்ரீ சத்ய சந்த்ரசேகரேந்திர சரஸ்வதி ஸ்வாமிகள் ஜயந்தீ |
| 13-05-2026 | செவ்வாய் | ஏகாதசி |
| 14-05-2026 | புதன் | த்வாதசி ; ப்ரதோஷ பூஜை |

17-04-2026 ; 24-04-2026 01-05-2026 ; 08-05-2026
வெள்ளிக்கிழமை பூஜை மாலையில் ஸ்ரீமஹாத்ரிபுரசுந்தரி
சமேத ஸ்ரீசந்த்ரமௌலீஸ்வரருக்கு விசேஷ அபிஷேக பூஜை

# முகாம் நிகழ்ச்சிகள்

நிகழ்ச்சிகளின் தொடர்ச்சி



பிப் 21 - இன்று தண்டலம் சங்கரா பள்ளிக்கு பூஜ்ய ஸ்ரீ சங்கராசார்ய சுவாமிகள் விஜயம் செய்து பள்ளி மாணவர்களுக்கு அனுக்ரஹபாஷணம் அளித்து ஆசி வழங்கினார்கள்.

பிப் 24 - தண்டலம் சங்கரா பள்ளியில் கட்டப்பட உள்ள புதிய கட்டிடத்தின் பூமி பூஜையில் கலந்து கொண்டு அருளாசி வழங்கினார்கள். தொடர்ந்து சங்கரா மருத்துவமனை இடத்தில் அமையப் பெறவுள்ள முதியோர் மைய பூமி பூஜை பூஜ்ய ஸ்ரீ சங்கராசார்ய சுவாமிகள் முன்னிலையில் அவர் தம் ஆசிகளுடன் நடைபெற்றது. மேலும் தண்டலம் ஸ்ரீதேவி பூதேவி சமேத ஆதி நாராயண பெருமாள் கோவில் கும்பாபிஷேக யாக சாலை பூஜைகளில் பூஜ்ய ஸ்ரீ சங்கராசார்ய சுவாமிகள் கலந்து கொண்டு சிறப்பித்தார்கள்.

பிப் 25 - காஞ்சி ஸ்ரீ காமாக்ஷி அம்பாள் பிரம்மோற்ஸவத்தின் 5ம் நாள் நிகழ்ச்சியில் சம்பிரதாயப்படி ஸ்ரீ காமாக்ஷி அம்பாள் விசேஷ அலங்காரத்துடன் தங்க பல்லக்கில் புறப்பட்டு ராஜ வீதிகள் வழியாக சங்கர மடத்திற்கு எழுந்தருளி, ஸ்ரீ மடத்தில் பூஜ்ய ஸ்ரீ சங்கராசார்ய சுவாமிகளால் விசேஷ பூஜைகள் நடத்தப் பெற்று தீபாராதனை நடைபெற்றது. தொடர்ந்து பிருந்தாவனங்களில் பிரசாதங்கள் சமர்ப்பிக்கப்பட்டது.

பிப் 26 - ஆந்திர மாநில வேம்பள்ளி என்ற இடத்தில் உள்ள ஸ்ரீ நந்தீஸ்வர சுவாமி தேவஸ்தான சிவாலய கும்பாபிஷேக பிரதிஷ்டை நிகழ்ச்சி பூஜ்ய ஸ்ரீ சங்கர விஜயேந்திர சரஸ்வதி சங்கராசார்ய சுவாமிகளின் அருளாசிகளுடன் அவர்கள்

முன்னிலையில் நடைபெற்றது. மாலை பூஜ்ய ஸ்ரீ சங்கராசார்ய சுவாமிகள் காஞ்சி திரும்பினார்கள்.

**பிப் 28** - பூஜ்ய ஸ்ரீ ஜெயேந்திர சரஸ்வதி சங்கராசார்ய சுவாமிகளின் 8வது வார்ஷிக ஆராதனை மஹோத்ஸவத்தை முன்னிட்டு விசேஷ அலங்காரங்களுடன் பூஜைகள் நடைபெற்றன.

**மார்ச் 1** - ஸ்ரீ மடத்தில் பூஜ்ய ஸ்ரீ ஜெயேந்திர சரஸ்வதி சங்கராசார்ய சுவாமிகளின் 8வது வார்ஷிக ஆராதனை மஹோத்ஸவம் வெகு விமரிசையாக பூஜ்ய ஸ்ரீ சங்கர விஜயேந்திர சரஸ்வதி சங்கராசார்ய சுவாமிகள் மற்றும் பூஜ்ய ஸ்ரீ சத்ய சந்திரசேகரேந்திர சரஸ்வதி சங்கராசார்ய சுவாமிகள் முன்னிலையில் வேத பாராயணம், விசேஷ ஹோமங்கள், பல்வேறு பூஜைகள், ஹாரத்திகள் பிருந்தாவனத்தில் நடைபெற்றன. ஸ்ரீ மடத்தின் ஆஸ்தான வித்வான்களின் பஞ்சரத்ன கீர்த்தனைகள் இசை நிகழ்ச்சி நடைபெற்றது. பிருந்தாவனத்தில் தீர்த்த நாராயண பூஜை நடைபெற்றது. ஆராதனை மஹோத்ஸவத்திற்கு காஞ்சி காமாக்ஷி அம்மன் கோவில், திருமலை திருப்பதி தேவஸ்தானம் மற்றும் இதர திருக்கோவில்களில் இருந்தும் பிரசாதங்கள் வரப் பெற்று பிருந்தாவனத்தில் சமர்ப்பிக்கப்பட்டது.

மாலை ஸ்வர்ண ரதோத்ஸவம் நான்கு ராஜ வீதிகளிலும் வலம் வரப்பெற்றது. இம்மஹோத்ஸவத்தில் திரளான பக்தர்கள் பல்வேறு பகுதிகளில் இருந்தும் வருகை தந்து ஸ்ரீஸ்ரீ சுவாமிகளின் அருளாசி பெற்று உய்தார்கள்.

ஸ்ரீ ஜெயந்திர சரஸ்வதி சங்கராசார்ய சுவாமிகளின் 8வது ஆராதனை மஹோத்ஸவம் ஆவஹந்தி ஹோமத்துடன் கோவா ஸ்ரீ கோமண்டக் திருப்பதி பாலாஜி கோவிலிலும் விமரிசையாக நடைபெற்றது.

ஸ்ரீஸ்ரீ காஞ்சி கமாக்ஷி அம்மாள் பிரம்மோத்ஸவ குதிரை வாகன காட்சிகள் நேரலையில் ஒளிபரப்பபட்டது,

**மார்ச் 2** - ஸ்ரீ காஞ்சி காமாக்ஷி அம்பாள் தேவஸ்தான தீர்த்தவாரி உத்ஸவம் பூஜ்ய ஸ்ரீ சங்கராசார்ய சுவாமிகள் முன்னிலையில் காலையில் திருக்கோவில் பஞ்ச கங்கா திருக்குளத்தில் நடைபெற்றது.

தொடர்ந்து ஸ்ரீ காமாக்ஷி அம்பாள் சரப வாஹனத்தில் புறப்பாடு நடைபெற்றது.

**மார்ச்** 3 - 2026-ம் ஆண்டு பிரம்மோத்ஸவ பூர்த்தி த்வஜ அவரோஹன நிகழ்ச்சி பூஜ்ய ஸ்ரீ சங்கராசார்ய சுவாமிகள் முன்னிலையில் நடைபெற்றது.

**மார்ச்** 7- பூஜ்ய ஸ்ரீ சங்கராசார்ய சுவாமிகள் விஜயவாடாவிற்கு விஜய யாத்திரை புறப்பட்டு சென்றார்கள். மாலை கிருஷ்ணா நதிக் கரையில அனுஷ்டானங்கள் செய்தருளினார்கள்.

**மார்ச்** 8 - விஜயவாடாவில் உள்ள ஸ்ரீ கனக துர்கா ஆலய கும்பாபிஷேகம் பூஜ்ய ஸ்ரீ சங்கராசார்ய சுவாமிகள் முன்னிலையில் நடைபெற்றது.

இன்று காஞ்சி ஸ்ரீ மடத்தில் பூஜ்ய ஸ்ரீ சத்ய சந்திரசேகரேந்திர சரஸ்வதி சுவாமிகள் முன்னிலையில் சமஷ்டி உபநயன நிகழ்ச்சிகள் நடைபெற்றது. மேலும் ரிக் சம்ஹிதா ஹோமம் பூஜ்ய ஸ்ரீ சத்ய சந்திரசேகரேந்திர சரஸ்வதி சுவாமிகள் முன்னிலையில் நடைபெற்றது.

**மார்ச்** 10 - காஞ்சி சர்வகலா சாலை வளாகத்தில் அகில பாரதிய சாஸ்த்ரோத்ஸவம் நிகழ்ச்சியை துவக்கி வைத்தார்கள். நிகழ்ச்சியில் கலந்து கொண்டவர்களுக்கு அருளாசி வழங்கி சிறப்பித்தார்கள்.

பூஜ்ய ஸ்ரீ சங்கராசார்ய சுவாமிகளின் 58வது ஜயந்தி மஹோத்ஸவம் தண்டலத்தில் கோ பூஜையுடன் துவங்கி தொடந்து மறுநாளும் பூஜைகள் தீபாராதனைகள் நடைபெற்றது.

**மார்ச்** 11 - காஞ்சி ஸ்ரீ மடத்தில் பூஜ்ய ஸ்ரீ சங்கராசார்ய சுவாமிகளின் 58வது ஜயந்தி மஹோத்ஸவத்தை முன்னிட்டு ரிக் சம்ஹிதா ஹோமம் தொடர்ந்து மஹாராஷ்ட்ரா வைதீகர்களால் நடைபெற்றது.

**மார்ச்** 12 - ஸ்ரீ காஞ்சி காமாக்ஷி அம்பாள் தேவஸ்தான புஷ்ப பல்லக்கு உற்சவம் வெகு சிறப்பாக நடைபெற்றது.

**மார்ச்** 13 - பூஜ்ய ஸ்ரீ சுவாமிகளின் 58வது ஜயந்தி மஹோத்ஸவத்தை முன்னிட்டு சங்கீத கச்சேரிகள் நடைபெற்றன. தொடர்ந்து பூஜ்ய ஸ்ரீ சங்கர விஜயேந்திர சரஸ்வதி

சங்கராசார்ய சுவாமிகளுக்கு பூஜ்யஸ்ரீ சத்ய சந்திரசேகரேந்திர சரஸ்வதி சங்கராசார்ய சுவாமிகளால் ஸ்வர்ண பாத பூஜையும், காஷ்மீர கேசரி புஷ்ப அர்ச்சனையும் செய்விக்கப்பட்டது.

ஏனாத்தூர் சர்வகலா சாலையில் அகில பாரதீய சாஸ்த்ரோத்ஸவ நிகழ்ச்சிகள் பிற்பகலில் நடைபெற்றது.

**மார்ச்** 14 – ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடாதிபதி ஜகத்குரு பூஜ்ய ஸ்ரீ சங்கர விஜயேந்திர சரஸ்வதி சங்கராசார்ய சுவாமிகளின் 58வது ஜயந்தி மஹோத்ஸவம் கேரள மாநிலம் குருவாயூரில் சிறப்பாக கொண்டாடப்பட்டது.

ஸ்ரீ மடத்தில் ஜயந்தி மஹோத்ஸவம் காலை முதலே துவங்கி நடைபெற்றது. புஷ்பாஞ்சலி நிகழ்ச்சிகளும் பாத பூஜையும் விமரிசையாக நடைபெற்றது.

**மார்ச்** 16 – இன்று பிரதோஷ பூஜை பூஜ்ய ஸ்ரீ சங்கராசார்ய சுவாமிகளால் மாலை நடத்தப்பட்டு அருளாசி வழங்கப்பட்டது.

**மார்ச்** 18 – ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடாதிபதி ஜகத்குரு பூஜ்ய ஸ்ரீ சங்கராசார்ய சுவாமிகளின் அனுக்ரஹத்துடன் அயோத்தி ஸ்ரீ சங்கரமடத்தில் வஸந்த நவராத்திரி உற்ஸவமும், ராம நவமி உற்ஸவமும் மார்ச் 19 முதல் துவங்கப்பட்டு மார்ச் 27 வரை நடைபெற்றது.

காஞ்சி ஸ்ரீ மடத்தில் யுகாதி மஹோத்ஸவம் சிறப்பாக நடைபெற்றது. மேலும் வஸந்த நவராத்திரி மற்றும் ராம (நவமி) தர்பார் மஹோத்ஸவ ஆரம்ப விசேஷ பூஜைகளுடன் பக்தர்களுக்கு அருளாசி வழங்கினார்கள்.

**மார்ச்** 21 – நசரத்பேட்டை ஸ்ரீ சங்கர விஜயேந்திர சரஸ்வதி ராமாயண பாடசாலையில் ராமாயண பாராயணம் தொடர்ந்து 7 நாட்கள் நடைபெற்றது.

**ஹர ஹர சங்கர**
**ஜெய ஜெய சங்கர**

ப்ரதீபப் பேழை

# கீர்த்தி சந்திரன் பரதன்

மனிதன் தனக்குப் பெருமையைத் தேடுகிறான். புகழை விரும்புகிறான். அப்புகழை அடைய பல வகையிலும் முயற்சிக்கிறான். பெரும்பாலோர் அந்தப் புகழைத் தேடுகிறார்கள். ஆனால் சிலருக்கோ அந்தப் புகழ், தானே போய்ச் சேருகிறது. எப்படிப்பட்டவர்களிடம் புகழ் அடைக்கலம் புகுகிறது? வள்ளுவர் இதற்கு விடை அளிக்கிறார். செய்தற்கரியவற்றைச் செய்தல், செருக்கில்லாமை, பிறர் குற்றம் சொல்லாமை ஆகிய நற்குணங்கள் யாரிடம் பொருந்தி உள்ளதோ அவர்களிடம் புகழ் தங்குகிறது.

**ஒளியொருவர்க்குள்ள வெறுக்கையிளி**
**யொருவற் கஃதிறந்து வாழ்து மெனல்**

ஒருவனது பெருமைக்குக் காரணம் செய்தற்கரியவற்றைச் செய்வதில் ஊக்கம் மிகுதியாம். இழிவுக்குக் காரணம் அவற்றைச் செய்யாதிருத்தலாம்.

ஒருமை மகளிரே போலப் பெருமையுந்
தன்னைத் தான் கொண்டொழுகினுண்டு

நிறையினின்று தவறாது தன்னைத் தான் பாதுகாத்துக் கொண்டொழுகுவானிடத்து, பெருமைக் குணம் உண்டாகும் என்றும், பெருமை யாரை அடையும், புகழ் எவரிடம் நிலைத்து இருக்கும் என்பதை திருவள்ளுவர் மிகத் தெளிவாக உரைக்கிறார்.

ஸ்ரீராமாயண பாத்திரங்களில் இந்தப் புகழ் யாரிடம் சென்றது.

ஸ்ரீராமர், லக்ஷ்மணர், அனுமன், வாலி, அங்கதன், ராவணன், விபீடணன் முதலிய எல்லோரிடமும் புகழ் தேடிச் சென்றது. செந்நாப் புலவன் செப்பிய பெருமைக்குரிய சகல இலக்கணங்களையும் ஒருங்கே கொண்டவன் அனுமன். செய்தற்கரிய வற்றைச் செய்தல், செருக்கு இல்லாமை, பிறரை குற்றம் சொல்லாமை என்ற சகல நற்குணங்களையும் கொண்டவன் அனுமன். அனுமனின் புகழ் அண்டம் எங்கிலும் பரவி இருக்கிறது. இவ்வளவு புகழ் பெற்ற அனுமனை ஓர் அடியார்க்கு அடியாராகத் தான் சித்தரிக்கிறார் கோஸ்வாமி துளசிதாஸ். தனது ராமசரித மானஸத்தில். **'என் கடன் பணிசெய்து கிடப்பதே'** என்பது தான் அனுமனின் குறிக்கோள் என்கிறார் கோஸ்வாமி.

அதே கோஸ்வாமி பரதனைச் சித்தரிக்கும் போது **'கீர்த்தி சந்திரன் பரதன்'** என்கிறார். பரதனை ஓர் கீர்த்தி சந்திரனாக ஆக்கி விட்டார் துளசீதாஸ். இதைத் தாம் நவிலாமல் ஒப்புயர்வற்ற ச்ரேஷ்ட

முனீச்வரரான பரத்வாஜரின் மூலமாகச் சொல்கிறார். பரதனின் புகழை வர்ணிக்கும் பொழுது அந்த கீர்த்தியைச் சந்திரனுடன் ஒப்பிட்டு ஓர் அழகிய உருவமாக உருவகப்படுத்துகிறார். பரத்வாஜர் கூறுகிறார்:-

ஹே குழந்தை பரத ! உனது புகழ் நிர்மலமான வெண்மதி, ஸ்ரீ ராம பிரானுடைய அடியார்கள் குமுதமாகவும், சகோரப் பட்சிகளாகவும் ஆகின்றனர்.

இங்கு ஸ்ரீராமபிரானின் அடியார்களைக் குமுதத்திற்கும், சகோர பட்சிகளுக்கும் உவமைப்படுத்த என்ன காரணம்?

ஸ்ரீ ராம பக்தர்களில் இரண்டு பிரிவினர் உளர். ஒன்று நிவ்ருத்தி மார்க்க பக்தர்கள். மற்றவர் பிரவ்ருத்தி மார்க்க பக்தர்கள். ஸ்ரீ நாரதர், ஸநகாதியர் ஆகியோர் நிவிருத்தி மார்க்க பக்தர்கள். ஸ்ரீ ப்ரஹலாதரும், அம்பரீஷரும், ப்ரவருத்தி மார்க்க பக்தர்கள். குமுதத்தின் உவமையினால் நிவிருத்தி மார்க்கத்தில் உள்ள பக்தர்களுக்கும், சகோரத்தினால் ப்ரவிருத்தி மார்க்க பக்தர்களுக்கும், சங்கோதமாக உவமிக்கப்பட்டுள்ளது. குமுதத்தின் வாழ்க்கை நீரை ஒட்டியிருந்தும், அந்நீரினால் மகிழ்ச்சி அடையாமல் தன்னிலும் வேறாகிய ஆகாய வெளியில் உள்ள சந்திரனைக் கண்டு பூரிப்படைந்து தன் அழகிய இதழ்களை விரித்துக் கொள்கிறது. அதே போலப் பக்தர்களின் உடல் இவ்வுலகிலிருந்த போதிலும், உலகப் பற்றுக்களை அறவே ஒழித்து பற்றற்றவர்களாக ஆகி, ஸம்ஸார பந்தத்திலிருந்து விடுபட்டவர்களாகப் பரந்தாமனின் பாத ஸேவையை நாடி அப்பெருமானின் கிருபா கடாக்ஷத்தினால் குமுதத்தை போல் அக மகிழ்கிறார்கள்.

சகோரப் பறவைகள் தாம்பத்ய வாழ்க்கையில் இருந்த போதிலும், மக்கள் மகவுடன் வாழ்ந்த போதிலும், சந்திரனிடத்தில் தான் தங்களது முழு அன்பையும் சொரிகிறது. சந்திரன் தோன்றியவுடன், மக்கள் மகவு எல்லாவற்றையும் மறந்து சந்திரனிடையே ஒன்றி ஒருமனப்பட்டு விடுவது போன்று ப்ரவிருத்தி மார்க்க பக்தர்கள் கிருத க்ருத்யங்களில் ஈடுபட்ட போதிலும் பகவானிடம் நிச்சலமான ப்ரேமையும், ஆழ்ந்த அன்பையும் வைத்து, பகவானைக் கண்ட மாத்திரத்தில் மற்ற எல்லாவற்றையும் மறந்து விடுகிறார்கள்.

பரதனுடைய சரித்திரத்தினால், நிவிருத்தி மார்க்க பக்தர்களும், மோக்ஷத்தை அடைகிறார்கள். எவ்விதம் சந்திரன் உதித்தவுடன் குமுதம் பூரிப்படைந்து ஜடவஸ்துவாயிருந்த போதிலும் சேதனவஸ்துவைப் போன்று வ்யவஹாரம் புரிகிறதோ, அதே மாதிரி சகோரம் சேதனமாயிருந்தும் இந்த அவனிக்கு ஜடப்பொருள் போல் ஆகிவிடுகிறதோ, அதேமாதிரியே விரக்த

புருஷர்களும் ஸ்ரீ பரதனுடைய புகழ் கீதத்தில் மோகித்து விடுகின்றனர். ஸம்சார பந்தத்தில் ஈடுபட்டவர்கள் கூடப் பரதனுடைய கீர்த்தியைக் கேட்டு அதில் ஈடுபட்டு வாழ்க்கையில் வெறுப்படைகிறார்கள்.

வானத்துச் சந்திரனோ காலக்கிரமப்படி, தினகதிப்படி உதயமாகிறது. ஆனால் பரதனாகிய கீர்த்தி சந்திரனோ காலவேறுபாடின்றி எப்பொழுதுமே பிரகாசித்துக் கொண்டிருக்கிறான். இரவில் மட்டுமல்ல, பகலிலும் கூட பிரகாசிக்கிறான் என்பதை தெரிவிக்கவே சதா என்ற வார்த்தையை உபயோகிக்கிறார் கவி சூர்ய நாராயணன். இந்தக் கீர்த்தி சந்திரனின் ஒளியை அபகரிக்க இயலாமல் தான் அடங்கி ஒடுங்கி இருக்கிறான். அச்சந்திரனோ அஸ்தமனம் அடைகிறான். ஆனால் இச்சந்திரனோ அஸ்தமனம் அடைகிறதே இல்லை. இயற்கைச் சந்திரனோ குறைந்து குறைந்து தேய்ந்து ஒன்றும் இல்லாமல் ஆகி மறுபடியும் சிறிது சிறிதாக வளர்ச்சியை அடைந்து முழுமதியாக ஆகிறான். ஆனால் இந்தக் கீர்த்தி சந்திரனோ தேய்வு என்பது இல்லாமலேயே நாளுக்கு நாள் வளர்ந்து கொண்டே போகிறான்.

வானவீதியில் உலாவும் சந்திரனால் சக்ரவாகப் பறவைகள் துன்பம் அடைகின்றன. ஆனால் மூன்று உலக ரூபியான சக்ரவாகம் அச் சந்திரனில் ப்ரீதி வைக்கின்றன. ஆதவன் உதித்தவுடன் அவ்வம்புலியின் ஒளி மங்கி விடுகிறது. ஸ்ரீ ராமபிரானின் ப்ரதாப ரூபியான கதிரவனுக்கு முன்னால் கூட ஒளி குன்றாமல் முன்னிலும் அதிக ஒளியுடன் சுடர்விட்டுப் பிரகாசிக்கிறது இந்தப் புகழ்ச் சந்திரன்.

ஆகாயத்தில் பவனி வரும் சந்திரன் இரவில் தான் சுகத்தை அளிக்கிறது. அப்படியும். எல்லோருக்கும் சுகத்தை அளிக்கவில்லை. சந்திரனால் துன்பமடைபவர்கள் யார்? விரஹ தாபமுள்ள ஆடவரும், பெண்டிரும் சந்திரனை ஒரு தீப்பந்தாகக் கருதிச் சபிக்கிறார்கள். தாமரையோ சந்திரனைக் கண்டவுடன் துன்பம் தாங்க மாட்டாமல் தன் இதழ்களைக் குவித்துக் கொள்கிறது. சக்ரவாகங்கள் அடையும் துன்பமோ கொஞ்சமல்ல. இவர்கள் எல்லோருக்கும் சந்திரன் பரமவைரியாக இருக்கிறான். இந்த இந்துவோ (சந்திரனோ) எக்காலத்திலும், எல்லோருக்கும், எல்லாப் பருவங்களிலும், எல்லாப் பருவத்தினர்களுக்கும், மூப்பு அடைந்தவர்களுக்குக் கூடத் தனது எல்லையில்லா இன்பத்தை வாரி வாரி இறைக்கிறான். எல்லோரும் இந்த இன்ப மதுவை உண்டு உள்ளம் களிக்கின்றனர்.

இயற்கை இந்துவை ராகு இரையாக நினைத்து, விழுங்கி விடுகிறது. விழுங்கிய பின்னர் அதைக் கக்கி

விடுகிறது. இந்தக் கீர்த்தி சந்திரனையும் விழுங்க கைகேயியின் சூழ்ச்சியாகிய ராகு முயற்சிக்கிறது. ஆயினும் அம்முயற்சியில் படுதோல்வி அடைந்து விடுகிறது. அருகில் நெருங்கக் கூட முடியவில்லை. பரதனாகிய இந்தக் கீர்த்தி சந்திரனோ தனது பூர்ண கலைகளுடன் பரிபூர்ணமாக, தேஜோமயமாகப் பிரகாசிக்கிறான்.

இயற்கை அன்னையின் எழில் சந்திரிகையில் போதுமான அளவு அம்ருதம் நிரம்பியிருக்கவில்லை. இக்கீர்த்தி சந்திரிகையிலே ஸ்ரீ காகுஸ்தனின் கருணை மிக்க, அன்பு நிரம்பிய அம்ருத வெள்ளம் பெருக்கெடுத்துத் ததும்பி நிற்கிறது.

அம்பரத்தில் உள்ள அன்னவன் குருவின் அபிமான ரூபியான குற்றத்தினால் குற்றம் பொருந்தியவனாக ஆகிறான். இக்கீர்த்தி சந்திரனையோ குரு வசிஷ்டரே வாயார மனமாரப் புகழ்கிறார். புகழ்மாலைகளை அணிவிக்கிறார்.

இயற்கைச் சந்திரனோ ஏதோ சிறிதளவு அம்ருதத்தை இப்புவியில் சேர்ப்பிக்கிறான். பெரும்பாலான அம்ருதம் புவியை அடைவதில்லை. இக்கீர்த்தி சந்திரனோ ராமபக்தியான அம்ருத கலசத்தையே இப்புவி எங்கும், யாவரும் சமமாகப் பருகும்படி அளிக்கிறான். அந்த அம்ருதத்தினால் மரண பயமற்று ராமபிரானின் அமர பக்தியை ஜீவர்கள் அடைகிறார்கள்.


।। श्रीः ।। Cell : 9840217036

**V.K.N. PRINTERS**

164, R.H. Road, MYLAPORE, CHENNAI-4, e:mail:vknprinter@gamil.com

DTP PRINTING & PUBLISHING, ALL LANGUAGES RELIGIOUS BOOKS etc.,

(అన్ని భాషలలోను ముద్రించి ఇవ్వబడును.)

Sanskrit, Tamil, Old Grantham, Hindi, Telugu, Kannada, Malayalam and other languages.

Transliteration are available in all preferable languages.

70, 80 సంవత్సరములకు ముందున్న పురాతన గ్రంథ, శ్లోక పుస్తకములను

కొత్తగా మరల టైప్ చెయ్యకుండా New Font లో ముద్రించి ఇవ్వబడును.

దిద్దుబాటులుంటే (with Editing) సరిచేసి ఇవ్వగలము. (without proof reading)

60, 70, 80 வருடங்களுக்கு முன்புள்ள பழைய க்ரந்த புத்தகங்களும், ச்லோக புத்தகங்களும், மீண்டும் Type செய்யாமல் புதிய எழுத்துக்களில் (New Font) அச்சிட்டுத்தரப்படும்.



ஓம் தந்வந்தரயே நம:

# 4. ஆயுர்வேதமும் - ஸுபாஷிதமும்

## தொடர்பு

டாக்டர். சுபாலா

**ஆயுர்வேதத்தில் தினச்சரியா (Dinacharya) மற்றும் வைத்தியகீய சுபாஷிதம்**

**தினச்சரியா (Dinacharya) – ஆயுர்வேதம்**

ஆயுர்வேதம் (Ayurveda) உடல்நலம் மற்றும் ஆயுளை பாதுகாக்க தினசரி வாழ்க்கை முறையை மிக முக்கியமாகக் கூறுகிறது. இதையே தினச்சரியா என்கிறோம்.

**தினச்சரியாவின் முக்கிய அம்சங்கள் :**

பிரம்ம முகூர்த்தத்தில் எழுதல், சூரிய உதயத்திற்கு முன் எழுவது ஆரோக்கியத்திற்கு நல்லது. மனமும் உடலும் சுறுசுறுப்பாக இருக்கும். மலவிசர்ஜனம் (வயிறு காலி செய்தல்) உடலில் உள்ள கழிவுகளை வெளியேற்றுதல் அவசியம்.

**தந்த தாவனம் (பல் தேய்த்தல்):**

கசப்பு, கார்ப்பு, துவர்ப்பு ருசியுள்ள குச்சிகள் பயன்படுத்தல்.

ஜிஹ்வா நிர்லேகனம் (நாக்கு சுத்தம்)

நாக்கில் உள்ள அழுக்குகளை நீக்குவது.

அப்யங்கம் (எண்ணெய் தடவி மசாஜ்)

உடலுக்கு எண்ணெய் தடவி மசாஜ் செய்வது.

வாதத்தை சமப்படுத்தும்.

**வ்யாயாமம் (உடற்பயிற்சி)**

தினமும் ஒழுங்கான பயிற்சி.

ஸ்நானம் (குளியல்)

உடலை சுத்தமாக வைத்தல்.

ஆஹாரம் (உணவு முறைகள்), சத்தான மற்றும் சீரான உணவு. அளவுக்கு அதிகமாக சாப்பிடக் கூடாது.

நித்ரா (தூக்கம்)

சரியான நேரத்தில் தூங்குதல்.

**தினச்சரியா :**

**'ब्राह्मे मुहूर्त उत्तिष्ठेतब स्वस्थो रक्षार्थमायुषः।'**

**அர்த்தம்**

பிரம்ம முகூர்த்தத்தில் எழுவது ஆரோக்கியத்தையும், ஆயுளையும் பாதுகாக்க உதவும்.

**வைத்தியகீய சுபாஷிதம் (Vaidyakeeya Subhashitham)**

வைத்தியகீய சுபாஷிதங்கள் என்பது ஆயுர்வேதத்திற்கான நெறிமுறைகள், நல்வழிகள், மற்றும் அறிவுரைகளைச் சொல்லும் சிறந்த சொற்கள் ஆகும்.

**சில முக்கிய வைத்தியகீய சுபாஷிதங்கள்:**

**'आरोग्यं मूलमुत्तमम्'**

**அர்த்தம்:**

ஆரோக்கியமே மனித வாழ்க்கையின் முதன்மையான செல்வம்.

**''शरीरमाद्यं खलु धर्मसाधनम्'**

**அர்த்தம்:**

இந்த உடலே அனைத்து தர்மங்களையும் செய்யும் கருவி.

**'नित्यं हिताहारविहारसेवी'**

**அர்த்தம்:**

சரியான உணவு மற்றும் வாழ்க்கை முறையை பின்பற்றுபவன் எப்போதும் ஆரோக்கியமாக இருப்பான்.

**'रोगास्तु दोषवैषम्यं दोषसाम्यं आरोग्यता'**

**அர்த்தம்:**

தோஷங்களில் (வாதம், பித்தம், கபம்) சமநிலை இல்லாதது நோய்; சமநிலை தான் ஆரோக்கியம்.
தினச்சரியா - சுபாஷிதம் – தொடர்பு
தினச்சரியா என்பது நடைமுறை வழிமுறை சுபாஷிதம் என்பது அறிவுரையும் நெறியும் இரண்டும் சேர்ந்து:

உடல், மன ஆரோக்கியத்தை பாதுகாக்கும். நீண்ட ஆயுளை தரும். நோய்களைத் தடுக்க உதவும்

முடிவு

தினச்சரியாவை பின்பற்றுவதும், வைத்தியகீய சுபாஷிதங்களை மனதில் கொள்ளுவதும் நல்ல ஆரோக்கியம், நீண்ட ஆயுள், அமைதியான வாழ்க்கை ஆகியவற்றை தரும்.

(தொடரும்)

# வேதாந்த ஸம்வத்ஸரம்

*ஸ்ரீ சுப்பராய சர்மா*

*।। ஓம் தனாகாங்க்ஷாரஹிதாய வேதாந்தபாஸ்கராய நம: ।।*

**ஸர்வம் ப்ரஹ்மண ஏவேதம் ஸர்வம் ப்ரஹ்மமயம் ஜகத் ।**

**ஜஹி சத்ரும் தனாகாங்க்ஷாம் மித்யாம் வேதாந்தபாஸ்கர: ।।**

இதெல்லாம் பரமாத்மனுடையதே ! இதெல்லாம் பிரம்ம சொரூபமே. அதனால் செல்வத்தின் மேலுள்ள துராசையை விட்டுவிடு.

## 50. துக்கத்திற்கு அவகாசம் எது ?

**மா க்ருத: கஸ்யஸ்வித்தனம் ।**

**ஈசாவாஸ்யோபநிஷத் 1**

*பிறருடைய சம்பத்திற்கு ஆசைப்படாதே!*

மனிதனுடைய எல்லா நல்ல குணங்களையும் நாசம் செய்யக் கூடிய ஒரு கெட்ட குணம் அவனிடம் இருக்கிறது. அது தான் பேராசை (லோபம்). பேராசை என்ற ஒரு கெட்ட குணத்தினால் மனிதன் அரக்கனாகி விடுகிறான்!

பேராசை என்றால் என்ன ? வேறொருவருடைய பணத்திற்கு ஆசைப்படுவது! வேண்டிய அளவு சம்பத்து இருந்தாலும் இன்னும் வேண்டும் என்று ஆசைப்படுவது. இதெல்லாம் பேராசையின் வேறு வேறு ரூபங்கள். இந்த பேராசையை ஜெயிப்பது அவ்வளவு சுலபம் இல்லை! ஆனால் பிரயத்னம் செய்தால் முடியாததும் அல்ல!

இன்னொருவர் சம்பத்திற்கு ஆசைப்படாதே என்று இம்மந்திரம் நமக்கு உபதேசிக்கிறது. நமக்கு சம்பந்தம் இல்லாததும், நம்முடைய பொருள் அல்லாததும் ஆகிய இன்னொருவன் சம்பத்தை மண்ணுக்குச் சமமாகக் கருத வேண்டும். திருப்தியினால் ஆனந்தத்தைக் கண்டுகொள் -என்று இம்மந்திரம் உபதேசம் செய்கிறது. உண்மையில் நம்மிடம் இருக்கக் கூடிய இந்த சம்பத்து யாருடையது ? பகவானுடையதே! இப்படி விசாரம் செய்பவனுக்கு துக்கம் இருக்கவே இருக்காது.

*।। ஓம் சாந்தி: சாந்தி: சாந்தி: ।।*

# வேத ஸூக்தங்கள்

## ஜைமினி

### ஸம் ந இந்த்ராக்னீ ஸூக்தம்

பொதுவாகவே நாம் பார்க்கும் இவ்வுலகை தேவதா ஸ்வரூபமாகப் பார்ப்பது பாரதீயர்களின் பண்பு. வேதங்களே இதற்கு மூல காரணம். பார்ப்பது மட்டும் அல்லாமல் அவைகளின் ஆசீர்வாதத்தையும் வேதங்கள் வேண்டும். அப்படிப்பட்ட ஒரு ஸூக்தம் தான் கீழே வருவது. **'ஸம் ந இந்த்ராக்னீ'** என்னும் பதம் ஒவ்வொரு ரிக்கிலும் வருவது இதன் சிறப்பு. மொத்தம் 15 ரிக்குகள், இந்த ரிக் வேதம் 7ஆம் மண்டலத்தில் 35ஆவது அனுவாகத்தில் உள்ளன. இதை 2 பாகங்களாக வெளியிடுகிறோம். 'ஸமிந்த்ராக்னீ' என்று ஆரம்பிக்கும் யூட்யூபில் கேட்டு மகிழவும்.

(சென்ற இதழ் தொடர்ச்சி)

8. பரந்து காணும் ஸூர்யன் எங்களை சுகப்படுத்த எழுவானாக. திசைகள் எங்கள் சுகத்திற்குத் துலங்குக. ஸ்திரமாய் இருக்கும் மலைகளும், எங்கள் சுகத்திற்கு நிலைக்க. ஓடும் நதிகளும், சலங்களும் எங்கள் சுகத்திற்கு ஓடுக.

9. அதிதி வ்ரதங்களோடு எங்கள் சுகத்திற்கு வருக, மருத்துக்கள் எங்கள் சுகத்திற்கு நட்புடன் இருப்பார்களாக. விஷ்ணுவும், பூஷாவும் எங்கள் இன்பத்தை வளர்ப்பார்களாக. வானமும் சுகம் அளிக்கட்டும், வாயுவும் சுகமாக வீசுவானாக.

10. தேவ, ஸவிதா எங்கள் சுகத்திற்கும் உதிக்கும் உஷைகள், எங்கள் நலனுக்கும் பர்ஜன்யன் ப்ரஜைகளுக்குச் சுகத்தைத் தருக. க்ஷேத்ரத் தலைவனான சம்பு எங்களுக்கு சுகத்தைத் தருக.

11. விஸ்வே தேவர்கள் எங்கள் சுகத்திற்கு அனுகூலமாயும், சரஸ்வதி செயல்களோடு எமக்கு மகிழ்ச்சி தருக. வேள்விகளில் உதவுபவர்களும், ஈகை செய்பவர்களும், எம் சுகத்திற்கு ஆதரவாய் இருக்கட்டும். புவியிலும், ஜலத்திலும் இருப்பவர்கள் எங்கள் சுகத்திற்கு அனுகூலமாக இருக்கட்டும்.

12. சத்யத்தைக் காப்பவர்கள் எம்மை சுகப்படுத்தட்டும். பசுக்களும், குதிரைகளும் எம் சுகத்துக்கு இருக்கட்டும். நல்ல செயல்களைச் செய்பவர்களும், நல்ல கைப் பழக்கம் உள்ளவர்களான ரிபுக்கள், எங்கள் நலனுக்கு இருக்கட்டும். எங்கள் அழைப்பிலே பித்ருக்கள் எங்களுடன் ப்ரியமுடன் இருப்பார்களாக.

13. தேவனான அஜஏகபாதன் எங்கள் சுகத்துக்கு அனுகூலமாகட்டும். அஹிர்புத்னியனும் வானமும், எங்கள் சுகத்திற்கு துணைபுரிக. நீரின் பேரன் அக்னியும் தேவர்களால் காக்கப்படும் ப்ருஸ்னியும் எங்களுக்கு அனுகூலமாக இருக்கட்டும்.

14. எங்களுடைய இந்த தோத்திரத்ததை ஆதித்யர்களும், ருத்ரர்களும், வஸுக்களும் விரும்புவார்களாக. ப்ருஸ்னி எங்களுடைய அழைப்பைக் கேட்கட்டும்.

15. வேள்வியினால் போற்றப்பட்டவர்களும், மனுவால் போற்றப்பட்டவர்களும், எல்லாத் தேவர்களும் எங்களுக்கு நாங்கள் செல்ல பரந்த வழியை அளிப்பார்களாக. நீங்கள் எப்பொழுதும் எங்களை ஸ்வஸ்தியோடு பாலனம் செய்யுங்கள் .

(தொடரும்)

# சமஷ்டி உபநயனம்

ஸ்ரீ காஞ்சி காமகோடி சங்கரமடம்,

1, சாலைத்தெரு, காஞ்சிபுரம் - 631502

★★★★★★

ஸ்ரீ ஆதிசங்கர பகவத்பாதாள் பரம்பராகத மூலாம்நாய ஸர்வக்ஞபீடம் ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடாதிபதி ஜகத்குரு ஸ்ரீ ஸ்ரீ ஸ்ரீ சங்கராச்சார்ய ஸ்வாமிகள் அனுக்ரஹத்துடன் ஸ்வஸ்தி ஸ்ரீ ப்ராபவ நாம ஸம்வத்ஸரம், உத்தராயணம், வைகாசி மீ 21ம் தேதி, (04-06-2026) வியாழக்கிழமை சதுர்த்தி திதி, உத்ராட நக்ஷத்ரம், சித்த யோகம் காலை 10.30 மணி முதல் 11.30 மணிக்குள் கடக லக்னத்தில், சமஷ்டி உபநயனம் காஞ்சீபுரம் ஸ்ரீமடம் வளாகத்தில் நடைபெற உள்ளது.

உரியவர்கள் ஸ்ரீமடம் அலுவலகத்தில் தொடர்பு கொள்ளவும்.

மேனேஜர்

ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடம்

காஞ்சீபுரம்

தொடர்புக்கு- 044-27222115 /9445421115

(வயது 7 முதல் 13 வரை)

# சுக்ர நீதி

*சுக்ர நீதி வட மொழியில் உள்ள நூல். மனு ஸ்ம்ருதிக்குப் பிறகு பெரிதும் மதிக்கப்படும் நூல். சுமார் 10ஆம் நூற்றாண்டில் இது எழுதப்பட்டு இருக்கலாம் என்பது ஆராய்ச்சியாளர்களின் கணிப்பு. அரச தர்மத்தையே பெரும்பாலும் பேசினாலும் பொதுவான தர்மங்களையும் இது கூறும். பரந்த மனப்பான்மையுடன் இது எழுதப்பட்டு உள்ளது என்றால் மிகையாகாது. மொத்தம் ஐந்து அத்யாயங்களைக் கொண்டது.*

**மூன்றாம் அத்யாயத்தில் பொதுவான தர்மங்களை விரிவாகக் கூறும். ஸ்ரீ பண்டிதமணி கதிரேசன் செட்டியார் இதை வட மொழியிலிருந்து மிகச் சிறப்பாக மொழி பெயர்த்து உள்ளார். அதை ஒட்டியே நாமும் தருகிறோம்.**

உயர் குடி பிறப்பால் செருக்குற்றவன் குணம் செயல்களால் தன்னினும் சிறந்த பெரியோரை அவமதிப்பான். செய்ய வேண்டாத காரியத்தில் தன் அறிவை செலுத்துவான்.

வலிமையால் செருக்குற்றவன் விரைந்து போர் செய்தலில் மனத்தைச் செலுத்துவான். இன்றேல் மற்ற மக்களையும், பசு முதலிய உயிர்களையும் தன் வலிமையால் துன்புறுத்துவான்.

மானத்தால் செருக்குற்றவன், எல்லா உலகையும் துரும்பாய் எண்ணுவான். விலை மதிப்புள்ள பதவியில் இருந்ததற்கு தகுதி இல்லை எனினும் மற்றவர்களைத் தள்ளி அதைப் பெற விரும்புவான்.

இங்கனம் கூறிய கல்வி முதலியவை பொல்லார்க்கு வாய்ப்பின் செருக்கை உண்டாக்கும். நல்லார்க்கு வாய்ப்பின் பணிவு முதலிய உயர் குணங்களை உண்டாக்குவனவாம்.

கல்வியின் பயன் அறிவும் பணிவுமாம். செல்வத்தின் பயன் கொடையும் வேள்வியுமாம். வலிமையின் பயன் பெரியோரைக் காத்தல் ஆகும்.

வீரத்தின் பயன் பகைவரை வணங்கலும் அவர்பால் அரசிறை பெறுதலுமாம். உயர் குடிபிறப்பின் பயன் சமமும், தமமும் ஆகும். மானத்தின் பயன் பிறர் எல்லோரையும் தன் போல் கருதுதல் ஆகும்.

காரியத்தில் கண் உடையவன் தன் பெருமையைப் பொருட்படுத்தாமல் தாழ்ந்த குலத்தவனிடம் இருந்தும், கல்வியையும், மந்த்ரங்களையும் அழகு நிறைந்த பெண்ணையும் முயன்று பெற்று கொள்ளலாம்.

கடந்து போன பொருளைப் பற்றிக் கவலை கூடாது. வரக்கடிய பொருளை நினைக்க வேண்டும்.பெண்களையும், குழந்தைகளையும் அதிகமாகப் பாராட்டக் கூடாது. அதிகமாகத் துன்புறுத்தல் கூடாது. அவர்களை கல்வியிலும், வீட்டுப் பயிற்சியிலும் சேர்ப்பித்தல் வேண்டும்.

பிறர் பொருள் சின்னதாய் இருப்பினும் தானே எடுத்துக் கொள்ளக் கூடாது. எவனுடைய பாவத்தையும் பேசக் கூடாது. பெண்களைப் பழிக்கக் கூடாது.

பொய் சான்று கூறலாகாது. உண்மைச் சான்றை மாற் படக் கூறலாகாது. உயிர் போகும் தருவாயில் மிகப் பெரிய கார்யம் நடக்க பொய் கூறலாம்.

கள்வனிடத்திலும், பொருளையுடைய மனிதனையும் கொலை செய்ய விரும்புவனிடத்தில், மறைந்திருக்கும் மனிதனை தெரிந்தாலும் காட்டிக் கொடுக்கக் கூடாது.

(தொடரும்)

## மஹா பெரியவா பொன்மொழிகள்

- வாய்ப்பு கிட்டும் போதெல்லாம் மற்றவர்களுக்கு உதவி செய்ய வேண்டியது மனிதராய்ப் பிறந்த நம் கடமைகளில் ஒன்றாகும்.
- மனத்தை வெற்றி கொண்டவன் உலகத்தை வெற்றி கொள்வான். அந்த வெற்றிக்கு உதவுவது ஞானம்.
- ஈசனை தவிர வேறு பொருள் இல்லை என்ற அனுபவம் வந்து விட்டால் ஆசைக்கு இடமில்லை.

# மகா பெரியவாளின் நினைவு மஞ்சரி

**ஸ்ரீனிவாஸன் சித்தமல்லி**



மகா பெரியவாளின் தர்சனத்திற்காக பலமக்கள் அவரைப் பார்க்க விழைகிறார்கள். சில சமயம் தர்சனம் கிடைக்கிறது. சில சமயம் இல்லாமல் போகிறது. அவரது சந்த்ரமௌலீஸ்வரர் பூஜையைக் காண பலமுறை மடத்துக்கு நான் போவது உண்டு. அவருடன் பேச சந்தர்ப்பம் கிடைக்குமா என்று ஏங்கியது உண்டு. குரு தர்சனம் கோடி புண்யம் ஆகும். அந்த சந்தர்ப்பம் வந்தது.

பல வருடங்களுக்கு முன் அவர் ஸம்ஸ்க்ருத கல்லூரியில் முகாமிட்டிருந்தார். தினம் அங்கு நான் போவது உண்டு. அந்த சமயத்தில் என் மனைவிக்கு கழுத்தில் கட்டி ஒன்று தோன்றியது. அது தைராய்ட் கட்டி. அதை அறுவை சிகிச்சை மூலம் அகற்ற வேண்டும் என்று மருத்துவர் கூறிவிட்டார். எங்களுக்கு ஒரே கவலை வந்து விட்டது. சற்று யோசனைக்குப் பின் ஸ்ரீ சரணர்களைத் தர்சிக்கும் போது இதை வெளியிட்டேன். பெரியவாளும் ஆபரேஷன் வேண்டாம் மருந்தே போறும் என்றார். நானும் டாக்டரிடம் இதைச் சொல்ல மிக்கத்

தயக்கத்துடன் எட்டிக் கசப்பாக ஒரு மருந்தை எழுதி கொடுத்தார். தினம் ஒரு ஸ்பூன் சாப்பிடச் சொன்னார். என் மனைவியும் அதை உட்கொண்டாள். ஆச்சர்யம் ! இரண்டே மாதங்களில் கட்டி மறைந்து விட்டது. குருவின் அருள்.

1972ஆம் அண்டு ஜூன் மாதம் என் மூத்தப் பெண்ணிற்கு கல்யாணம். பெரியவாளின் ஆசீர்வாதத்துடன் 4 நாள் கல்யாணம் நிச்சயமாயிற்று. ஜானவாசத்தின் போது வாத்யார் பத்ரிகை, புடவை சீர் வரிசைகளை எடுத்து வரச் சொன்னார். ஜனங்களும் நிச்சயதார்த்ததிற்காக சத்ரத்தில் காத்துக் கொண்டிருந்தனர். நானும் உள்ளே சென்று பொருள்கள் வைத்திருந்த பீரோவைத் திறக்கப் போனேன். அதிர்ச்சி. பீரோ சாவியைக் காணவில்லை. அறை முழுவதும் தேடியாயிற்று. கிடைக்கவில்லை. மனம் வெதும்பினேன். மகா பெரியாவளை மனத்தில் த்யானித்து வேண்டிக் கொண்டேன்.

கவலையுடன் அமர்ந்திருந்த என்னிடம் ஒரு பையன் ஓடி வந்தான். ‘என்ன மாமா தேடிறீங்க?’ என்று கேட்டான். நான் அவனிடம் சாவி காணோம்டா என்றேன். ‘இந்தாங்கோ மாமா சாவி’ என்று ஒரு சாவியைக் கொடுத்தான். நான் பீரோவைத் திறந்து பொருள்களை எடுத்துக் கொண்டேன். சரி அந்தப் பையன் யார் என்று திரும்பிப் பார்த்தேன். அவனைக் காணவில்லை. எல்லோரும் தேடினோம் காணவில்லை. மகா ஸ்வாமிகளே அவன் உருவில் வந்தார் என்று நினைத்து கண்ணீர் மல்க மனத்தால் அவருக்கு வந்தனம் செய்தேன். குரு நினைத்தால் நடக்காதது எது.? மகா பெரியவா சரணம்.

## மஹா பெரியவா பொன்மொழிகள்

- தினமும் கொஞ்ச நேரமாவது சிவ நாமம் சொன்னால் எல்லா க்ஷேமமும் கிடைக்கும்.
- நல்ல எண்ணங்கள் இருந்தால் நல்ல செயல்கள் தானாகப் பெருகும்.
- பரோபகாரம் எதுவும் செய்யாத நாளெல்லாம் நாம் இருந்தும் வீணே.
- அன்பில்லா வாழ்கை வீண் வியர்த்தம்.
- சாந்தம் வந்தால் எல்லா பற்றும் போய்விடும்.
- அழிவில்லாத கடவுடளிடம் செலுத்தும் அன்புக்கு அழிவேது ?

# மண்ணின் மகளின் அறவுரைகள்

*வீராபுரம் சம்பத் தீக்ஷிதர்*

**ஆதாரம்: வால்மீகி இராமாயணம்**

*அறிமுகவுரை*

பெண்மைக்கு மரியாதையும், மதிப்பும் கொடுத்து கௌரவித்த நாடு பாரத நாடு. பெண்மையின் பெருமையை உலகம் அறிய ஒரு அற்புத காவியம் படைத்தது பாரத நாடு. ஸ்ரீமத் ராமாயணத்தில் (பெருமை மிகு இராமன் வழி) வாழ்க்கைத் துணை நலமாய் வாழ்ந்து காட்டிய மண்ணின் மகள் ஸீதா தேவி. நல்ல அறிவார்ந்த அறமறிந்த அறவாழ்வு வாழ்ந்த அறத்தின் துணை ஸீதாப் பிராட்டி. எனவே இராமாயணத்தை **'சீதாயா: சரிதம் மஹத்'** என்று கௌரவித்தனர். அந்த ஸீதாப் பிராட்டியின் அறம் நிறைந்த சொற்களை அனைவரும் நன்கு அறிய வேண்டும் என்பதற்காக இக்கட்டுரையை யாம் வரைகிறோம்.

**20. ஸ்ருதிர்ஹி ஸ்ரூயதே புண்யா ப்ராஹ்மணானாம் யஸஸ்வினாம் ।
இஹலோகே ச பித்ரு பார்யா ஸ்த்ரீ யஸ்ய மஹாமதே ।
அத்பிர்தத்தா ஸ்வதர்மேண ப்ரேத்ய பாவேண்பி தஸ்ய ஸா ॥**

ஹே! நல்லறிவாளரே! புகழ் மிக்க அந்தணர்களால் சொல்லப்பட்ட வேதவாக்யம் புண்ணியமானது என்று கேட்கப்படுகிறது. இம்மண்ணுலகில் ஒரு பெண் தகப்பனாரால் ''நீ இன்னார் மனைவி'' என்று கன்னிகா தானமாகக் கொடுத்த பின் அவள் தர்மத்தின் அடிப்படையில் கணவனை பின்பற்றுபவளாகச் செல்ல வேண்டும். (கணவன் தான் உயிர் மனைவி தான் உடல்) உடலும் உயிரும் போல அமைவது தான் கணவன் மனைவி உறவு.

**21. ஏவமஸ்மாத் ஸ்வகாம் நாரீம் ஸுவ்ருத்தாம் ஹி பதிவ்ரதாம் ।
நாபி ரோசஸே நேதும் த்வம் மாம் கேனேஹ ஹேதுனா ॥**

இப்படி கன்னிகாதானம் செய்து கொடுக்கப்பட்ட உமது மனைவியும், கணவனையே அனுஸரித்துச் செல்பவளுமான என்னை நீர் எந்தக் காரணத்தால் அழைத்துச் செல்ல விரும்பவில்லை.

(தொடரும்)

# ப்ரபோத சிந்தாமணி

*ஸ்ரீ எஸ். ராமசந்திர ஐயர்*

## 29. ஞானமே மேலான சம்பத்து

இந்த விசாலமான உலகில் எத்தனையோ சம்பத்துகள் உள்ளன. இவைகள் ஒவ்வொன்றும் விசேஷமானதே. எதுவும் கீழானது இல்லை. எல்லாம் முக்கியமானதே ஆகும். வித்யை, புத்தி, ஆரோக்கியம், ஆயுள், செல்வம், அழகு, அதிகாரம், கீர்த்தி, வீடு, மனைவி, கணவன், மக்கள்-இந்த சம்பத்துக்களில் எது தான் ஒருவனுக்கு வேண்டாம்! எல்லா சம்பத்துக்களும் எல்லோருக்கும் தேவையே. ஆனால், நாம் விரும்பும் செல்வங்கள் எல்லாம் நமக்கு கிடைக்கின்றனவா? எல்லாவற்றையும் அடைய நாம் சித்த புருஷர்களோ அல்லது சத்ய சங்கல்பரோ அல்லவே!

அப்படி என்றால் இந்த சம்பத்துக்களில் மிக முக்கியமான ஒன்றை நாம் சம்பாதித்துக் கொள்ள வேண்டாமா ? இந்த சிறப்பான சம்பத்துத் தான் ஞானம். ஞானம், வித்யை, அறிவு எல்லாம் ஒன்றே. இறைவன், மற்றும் சத்குருவின் அருளினால் மனிதன் அடையக் கூடிய உத்தமமான செல்வமே ஞானம். மனிதப் பிறவியில் ஞானத்தை விட மிக உயர்ந்தது எதுவும் இல்லை.

சர்வஜ்ஞனும், ஞான சாகரனும், ஜகத்குருவும் ஆகிய ஸ்ரீ கிருஷ்ணர் பகவத்கீதையில் (4-38) இவ்வாறு கூறியுள்ளார். **''ந ஹி ஜ்ஞானேன ஸத்ருசம் பவித்ரமிஹ வித்யதே''**, ஞானத்துக்கு சமமான பவித்ரமும், சிரேஷ்டமும், உத்தமமுமான சம்பத்து இந்த பதினான்கு லோகங்களிலும் வேறு எதுவும் இல்லை. இது எவ்வளவு சத்தியமான வார்த்தை.

ஞானத்தைப் பெறுவதற்கே நமக்கு இந்த மனிதப் பிறவி வாய்த்துள்ளது. ஞானத்தாலேயே மற்ற எல்லா செல்வங்களும் கிடைக்கின்றன. ஞானமே சத்தியமானது. மிக விலையுயர்ந்த சம்பத்து. ஞானம் இல்லாதவன் இரண்டு கால் விலங்குக்கு சமம். ஞானம் இல்லாத வாழ்வு ரசமற்றது.

**ஸ்வக்ருஹே பூஜ்யதே மூர்க: ஸ்வக்ராமே பூஜ்யதே ப்ரபு: ।**
**ஸ்வராஷ்ட்ரே பூஜ்யதே ராஜா வித்வான் ஸர்வத்ர பூஜ்யதே ।।**

கற்றோருக்கு சென்ற இடம் எல்லாம் சிறப்பு அல்லவா ? நாமும் ஞானம், நீதி, வித்யை, சம்பத்து, இறையுணர்வு போன்ற எல்லா நலன்களும் பெற்று மகிழ்ச்சியோடு வாழ்வோம்.

# ஸோபான பஞ்சகம்

*ஆதி சங்கரர் தனது இறுதி காலத்தில் தன் சிஷ்யர்களுக்கு எப்படி படிப்படியாக சாதனையை மேற்கொள்ள வேண்டும் என்று ஐந்து ஸ்லோகங்களில் கூறுகிறார். கர்மம், பக்தி, ஞானம் இவைகளை படிக்கட்டு போல் அனுஸந்தானம் செய்து ஜீவன் முக்தன் ஆகலாம் என்பதை மிக அழகாக இந்த ஐந்து ஸ்லோகங்களில் விவரித்துள்ளார். ஒவ்வொன்றாகப் பார்ப்போம்.*

**क्षुद्व्याधिस्च चिकित्स्यताम् प्रतिदिनम् भिक्षौषधम् भुज्यताम्**
**स्वादवन्नम् न तु याच्यताम् विधिवशात् प्राप्तेन सन्तुष्यताम्**
**शीतोष्णादि विषह्यताम् न तु व्रुथा वाक्यम् समुच्चार्यताम्**
**औदासीन्यमभीप्सताम् जनक्रुपा नैष्ठुर्यमुत्स्रुज्यताम्** ।। ४ ।।

க்ஷுத்வியாதிஸ்ச சிகித்ஸ்யதாம் ப்ரதி தினம் பிக்ஷௌஷதம் புஜ்யதாம்
ஸ்வாதன்னம் ந து யாச்யதாம் விதிவஸாத் ப்ராப்தேன ஸந்துஷ்யதாம் ।
ஸீதோஷ்ணாதி விஷஹ்யதாம் ந து வ்ருதா வாக்யம் ஸமுச்சார்யதாம்
ஔதாஸீன்யமபீப்ஸதாம் ஜனக்ருபானைஷ்டுர்யம் உத்ஸ்ருஜ்யதாம்
।। 4 ।।

**பொருள் :** ‘பசி’ என்னும் வ்யாதிக்கு பிக்ஷா ரூபமான சிகிச்சை கொடுக்க வேண்டும். ருசியான அன்னத்தை வேண்டாதே. விதிவசத்தில் கிடைத்ததை உட்கொள். குளிர் வெயில் இவற்றை சகித்துக் கொள்ள வேண்டும். வீணான வார்த்தை பேச வேண்டாம். உதாஸீனமாய் இருக்க வேண்டும். ஜனங்களிடத்தில் கருணை செய்வது அவர்களிடத்தில் த்வேஷத்தைத் தவிர்க்க வேண்டும்.